Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU




முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | மார்கழி 19 | புதன்கிழமை (04.01.2012) | பக்கங்கள் 16 | ஓசை – 95










# தற்கொலை மரணங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாவில் தற்கொலை மரணங்கள் என்றும் இல்லாத அளவில் அதிகரித்துள்ளது. இவ்வாறான தற்கொலைச் சம்ப வங்களினால் கடந்த ஆண்டு மட்டும் யாழ். மாவட்டத்தில் 179 பேர மரணமடைந்துள்ளனர். இதைவிட தற்கொலை முயற்சி மேற்கொண் ட பலர் உயிர்தப்பிய சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இத்தற்கொலை மரணங்களில் 50 வீதமானவர்கள் குடும்பப் பெண்கள் என்றும், அவர்கள் வறுமையில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் மருத்துவ மனையில் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்கள் தெரி விக்கின்றன.

இத்தற்கொலை முயற்சிகளுக்கும், மரணங்களுக்கும் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றது. வறுமை, பாலி யல் துஷ்பிரயோகம், குடும்பத்தகராறுகள் உட்பட பல காரணங்கள் தற்கொலை முயற்சிக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது என்றும் தரவுகள் தெரிவிக்கின்றன. (எஸ்)

## மீண்டும் அரசுடன் கூட்டமைப்பு பேச்சு

(கொழும்பு)

அரசுக்கும் கூட்டமைப்பிற்கும் இடை யேயான அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி மீண்டும் ஆரம பமாகவுள்ளன. இந்தத் தகவலை தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை வருகை தரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச் சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் பேச்சுவார் த்தை நடத்தவுள்ளதாகவும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தன் தெரிவித்துள்ளார். இனப்பிரச்சி னைக்கு அவசியம் தீர்வுகாணும் முகமாக நடைபெறும் இப்பேச்சுவார்த்தைகளின் போது இம்முறையும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து பேசப படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.


## வெளிநாடுகளில் இராணுவப் பயிற்சி

இராணுவத்தின் அனைத்துப் படைப்பிரிவுகளுக்கும் வெளி நாடுகளில் விசேட பயிற்சிகளைப பெற்றுக்கொடுப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக இராணுவத் தளபதி தெரிவித் துள்ளார்.

இதன் முதற்கட்டமாக சீனா, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாட்டு அரசு களுடன் ஏற்கனவே பேச்சுக்கள் நடத்தப்பட்டிருப்பதாகவும் மிக விரைவில் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் படை வீரர் கள் மேற்படி நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் இரா ணுவத் தளபதி மேலும் தெரி வித்தார்.

புத்தாண்டு நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே அவர் மேற்படி தக வல்களை வெளியிட்டார்.

## குழந்தையின் கழுத்தில் கத்தி; அரியாலையில் திருட்டு



யாழ். ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள வீடொன் றில் நேற்று இரவு 8.15 மணியள வில் ஆறு பேர் கொண்ட கொள் ளையர் குழு கூரிய ஆயுதங்கள் சகிதம் கைக்குழந்தையை பண யம் வைத்து 3 இலட்சம் ரூபாவை யும் 10 பவுண் தங்க நகைகளையும கொள்ளையடித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கைக்குழந்தையுடன் தனிமை யில் இருந்த பெண்மணியின் வீட டுக்குள் உள்நுழைந்த கொள்ளை யர்குழு வீட்டில் உள்ள பணத்தை யும் உடமைகளையும் தருமாறு

(15 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் கைதாகும் இந்தியப் பிரஜைகள்
### யாழில் முக்கிய பேச்சு

வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் இந்திய துணைத் தூதரக அதிகாரிகளுக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. நேற்று மதியம் இடம்பெற்ற இச்சந்திப் பின்போது வடக்கில் கைதுசெய்யப்படும் இந்தியப் பிரஜைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் ஏற்கனவே வடக்கில் கைது செய்யப்பட்ட 37 இந்திய மீனவர்கள் மீண்டும் இந்திய அதிகாரி களிடம் ஒப்படைக்கப்பட்டமைக்கு இந்திய துணைத்தூதரக அதிகாரி கள் நன்றி தெரிவித்தனர். (எஸ்)

## பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்

போருக்கு பின்னரான யாழின் அபி விருத்தி நிலைமைகளை ஆராய்வதற் காக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப் பினர் ஜேம்ஸ் வோட்டன் மற்றும் அவரது குழுவினர் இரண்டு நாள் விஜயத்தை மேற் கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ். வரும் இவர்கள் யாழ். குடாவில் அரசினால் முன்னெடுகப்படும் அபிவிருத் திப் பணிகள் தொடர்பாக அரச அதிப ரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள் ளனர். அத்தோடு வடமாகாண சபையின் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் வட மாகாண சபை தமிழ் மக்களுக்கு ஆற்றிவரும் பங்களிப்பு (15 ஆம் பக்கம் பார்க்க)

## அறவிட முடியாத கடனுக்கு அதிகாரிகள் கண்டனர் புதுவழி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் மீள் எழுச்சித்திட்டத்தின் ஒரு அம்சமாக வழங்கப்பட்ட கடனை அறவிடுவதற்காக மிகவும் வினோதமான முறை ஒன்று பின்பற றப்பட்டிருக்கிறது. செயலக அதிகாரிகள் இந்த வினோதமான முறையைப் பின் பற்றி நிதிசேகரிக்கும் நடவடிக்கைக்காக நேற்று களம் இறங்கினர். மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் கிராமங்களின் உட்கட்டு மானப் பணிகளை முன்னெடுத்தல், மக்க ளுக்கு வாழ்வாதாரக் கடன்களை வழங்கு தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன்படி சுழற்சிமுறையி லான வாழ்வாதார கடனாக ஒரு பயனா ளிக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண சபைக்கு விரைவாக தேர்தலை நடத்துக



இனப்பிரச்சினைத் தீர்வில் அர சுக்கு உண்மையாகவே அக்கறை இருக்குமானால் முதலில் வட மாகாணசபை தேர்தலை உடனடி யாக நடத்தவேண்டும். தேர்தல் மூலமாக தெரிவுசெய்யப்படும் வடமாகாணசபை நிர்வாகத் திடம் வடமாகாணத்தின் மீள்குடி யேற்ற, மீள் கட்டுமானம் உட்பட அனைத்து அபிவிருத்திப் பணிக ளையும் ஒப்படைக்க வேண்டும் என்றும், யுத்தம் 2009 ஆம் வரு டத்திலேயே முடிவிற்கு வந்துவிட் டாலும் கூட, 13 ஆம் திருத்தத் தின் அடிப்படையில் மாகாணங் களுக்கு அதிகாரங்களை வழ ங்க இன்னமும் தயாராக இல் லாத அரசின் இந்தக் கொள்கை யை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரி வித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

(15 ஆம் பக்கம் பார்க்க)

## போதைவஸ்து கடத்தல்; இந்திய மீனவர் யாழ்.சிறையில்


(யாழ்ப்பாணம்)

போதைவஸ்து கடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டு இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட ஐந்து இந்திய மீனவர்களைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கும்படி யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்த நவம்பர் 28 ஆம் திகதி மீன் பிடிக்க கடலு க்குச் சென்ற சமயம் அன்றிரவு கச்சத்தீவு அருகே அவர்களை படகுடன் இலங்கை கடற்படையினர் சிறைப் பிடித்துச் சென்றனர்.

இந்த 5 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் பொலி ஸாரிடம் ஒப்படைத்தனர். போதைப் பொருள் கடத்தியதாக அவர்கள மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட மீனவர்களை (15 ஆம் பக்கம் பார்க்க)

# வலி.கிழக்கின் எதிர்கால அபிவிருத்தி குறித்து பொதுமக்களுடன் அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை





(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பகுதியின் அபிவிருத்தி மற்றும் மக்களின் நாளாந்த பிரச்சினைகள் தொடர்பாகவும் ஏனைய பொதுப் பிரச்சினைகள் தொடர்பாகவும் அத்தகைய பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வுகளை எட்டும் வகையிலும் அப்பகுதி பொது மக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

வலிகாமம் கிழக்கு பொது மக்களுடனான இச்சந்திப்பு நேற்று அச்சுவேலியில் உள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில், பொதுவான பிரச்சினைகள் பல பொது மக்களால் முன்வைக்கப்பட்ட நிலையில் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய திட்ட மதிப்பீடுகளைச் சமர்ப்பிக்கும்படி அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் தொழில் வாய்ப்பு, சுயதொழில் முயற்சிகளுக்கான உதவிகள் போன்ற விடயங்கள் தொடர்பில் உரிய கவனமெடுக்கப்படும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

வீதிச் சீர்கேடுகள், கல்வித்துறை சார்ந்த பிரச்சினைகள் வீட்டுத்திட்டம் போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இக்கோரிக்கைகள் நாளடைவில் நிறைவேற்றப்படுமெனத் தெரிவித்த அமைச்சர் அச்சுவேலி தொழிற்பேட்டை அமையவுள்ள நிலையில் இப்பகுதி துரித கதியில் அபிவிருத்தி அடையுமென நம்பிக்கை தெரிவித்தார். அத்துடன் இப் பகுதியில் பல்வேறு சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளரும் வலி கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவருமான ஐங்கரன்,ஈ.பி.டி.பி.யின் அச்சுவேலி இணைப்பாளர் தர்மராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மாணவர்களுக்கு கௌரவம் கிளிநொச்சியில் வைபவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிச் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது.

கடந்த 2011 ஆம் ஆண்டு கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலிருந்து பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்று கோட்டம், வலயம், மாகாணம் ஆகிய மட்டங்களுக்குச் சென்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த 72 மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (கே)

# நாவற்குழி மேற்கில் இளைஞர் கழகம் அமைப்பு

நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் பிரிவின் புதிய இளைஞர் கழக அங்குராப்பண நிகழ்வு அண்மையில் கிராம அலுவலர் நடராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் குறித்த வெண்ணிலா இளைஞர் கழகத்தை தென்மராட்சி இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி.விமல் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சி இளைஞர் சேவை உத்தியோகத்தர் செ.உதயமோகன் கலந்து கொண்டார்.

இதன் புதிய நிர்வாகிகளாக எஸ்.துஷ்யந்தி தலைவராகவும், வி.அனித்தா செயலாளராவும், பி.கனிஸ்ரா பொருளாளராகவும். இ.மில்ரோய் விளையாட்டுப் பொறுப்பாளராவும். தி.விஜிதா ஊடக தகவல் பொறுப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (11)

# சிறுவர் துஷ்பிரயோகம் யாழில் தொடர்ந்து அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 2011 ஆம் ஆண்டில் யாழ்.குடாநாட்டில் மட்டும் 78 சிறுவர் துஷ்பிரயோகம் இடம் பெற்றுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

15 வயதுக்குட்பட்ட சிறுவர்களே அதிகளவில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள்.

சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படாமல் தவிர்ப்பதற்கு பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

பிள்ளைகளை கிரமமாகக் கண்காணிக்க வேண்டும். அவர்களுக்கான பாதுகாப்பையும், நன்னடத்தையினையும் பெற்றோர்கள் இனங்காட்ட வேண்டும்.

பிள்ளைகளை சரியான திசையில் நெறிப்படுத்துவதன் மூலம் தமது பிள்ளைகள் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு, பாலியல் துஷ்பிரயோகத்திற்கு முகம் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று யாழ். போதனா மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர். (எஸ்)

# அரியாலையில் திருட்டு

(அரியாலை)

இருள் சூழ்ந்த வேளையில் அரியாலை அந்தனர் வீட்டில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இலந்தைக்குளம் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அம்மன் கோவில் வீதியில் கடந்த இரண்டு மாதங்களாக வீதி விளக்குகள் ஒளிராத நிலையில் உள்ளதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் கடந்த 31ஆம் திகதி கோவில் வீதியில் உள்ள அந்தனர் வீட்டில் திருட்டில் ஈடுபட்டனர். திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார் சைக்கிள் திருட்டு யாழ்.குடாவில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துச் சென்றதனால் பாவனையாளர்கள் அச்சத்துடன், வாழ வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பகுதியில் பாடசாலைக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு பாடசாலைக்குள் பிள்ளையை விட்டு திரும்பி வந்து ப்பார்த்த போது பூட்டி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 8.00 மணிக்கு பாடசாலைக்கு முன்பாக இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான ஜனவரி மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு இதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்ரன் கேட்டுள்ளார் (54)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(தீவகம்)

தீவகக் கல்வி வலயத்தில் யா/அனலைதீவு சதாசிவ ம.வித்தியாலய அதிபர் பதவிக்கு வெற்றிடம் ஏற்படவுள்ளது.

இப்பதவிக்கு தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணபங்கள் கோரப்படுகின்றன. அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடது. இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, தரம் 2-1 இனைச் சேர்ந்த தீவகக் கல்வி வலய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை தீவகக்கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்படி முடிவுத் திகதி 15.01.2012 ஆகும்.

# துவிச்சக்கர வண்டிகளுக்கு இலக்கத்தகடு விநியோகம்

(வேலணை)

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளில் உள்ள துவிச்சக்கர வண்டிகளுக்கான 2012 ஆம் ஆண்டுக்குரிய அனுமதி இலக்கத் தகடு விநியோகம ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பகுதிகளில் உள்ள துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள் இவ் அனுமதித் தகட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறு வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி. சிவராசா கேட்டுக்கொண்டுள்ளார். (85)

# சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை விசுவமடுவில் 15 வர்த்தகர்கள் சிக்கினர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விசுவமடு பகுதியில் 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு சிகரெட்டை விற்பனை செய்த 15 வர்த்தகர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் வணிக நிலையங்களுக்கு திடீரென சென்று சிறுவன் ஒருவனை சிகரெட் வாங்குமாறு அனுப்பியபோது கடை உரிமையாளர்கள் சிகரெட்டை அச்சிறுவனுக்கு விற்பனை செய்யும் போது உத்தியோகத்தர்களால் இவ்வர்த்தகர்கள் கையும் மெய்யுமாக பிடிபட்டனர்.

இவர்களுக்கு எதிரான வழக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையை மேற்கொண்ட நீதிபதி பெ.சிவகுமார் திணைக்கள அதிகாரிகள் இவ்வாறு கட்டாயப்படுத்தி சிறுவனூடாக வாங்கவைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டதை வன்மையாகக் கண்டித்து எச்சரிக்கை செய்தார். மேலும் வர்த்தகர்களையும் எச்சரிக்கை செய்து விடுதலை செய்தார்.(கே)

# புத்தாண்டுக் கொண்டாட்டம் பெண்ணொருவருக்கு காயம்

குருநகர் மவுன்கார்மேல் பகுதியில் நேற்று - முன்தினம் இரவு புது வருட கொண்டாட்ட குதூகலத்தில் இளைஞர்கள் மூவர் வெடி கொழுத்தி எறியும் போது பெண்ணொருவரின் மீது விழுந்தது. இதன்போது காயப்பட்ட பெண் யாழ். பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து குறித்த மூவரும் நேற்று யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதவான் நீதிமன்ற நீதிபதி மூவரையும் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.




ஸ்ரீ ராம ஜெயம்

சகல பரிகாரங்களுக்கும் மலையாள மாந்திரிகம்.

கேட்ட வரத்தை எனக்கு கொடுத்தது கிருஸ்ணபுரமாத்மாவே!

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை. ஜாதக கணிப்பை ஆணி வேர் அக்கு வேராக கணித்து தெரிந்த பின்பே மலையாள மாந்திரிக சக்தி அவர் அவருக்கு ஏற்ற உச்சாடனம் செய்யப்படுகின்றது. கல்விஞான சித்தம் கிட்ட மட்டும் 9 மாதத்துக்கு முன்பே பரிகாரம் செய்து கொள்ள வேண்டும். அதி விஷேடமாக வெளிநாட்டவருக்கு என அவர்கள் எண்ணங்கள் நிறைவேறும் வண்ணம் வியாழக்கிழமை தோறும் இங்கு மாந்திரிக உச்சாடனங்கள் செய்யப்படுகின்றன. உள்நாட்டவருக்கென இம்மாதக்கடைசியில் வரும் திகதியில் காலை 09 மணி முதல் மாலை 05 மணிவரை அக்கினி குண்டல யாக பூஜைகள் நடைபெறும். இங்கு தீய வேலைக்கு இடமில்லை. இரகசியம் பேணப்படும். எம்மதத்தினருக்கும் சேவை உண்டு. சகல குறை நிறைகளுக்கும் முன் அறிவித்தலுடன் நேரத்தை ஒதுக்கி வந்தால் மட்டுமே என்னை சந்திக்கலாம்!

தேசபந்து, பேராசிரியர், தூர்க்கைதாசன் கலாநிதி P.K. சாமி J.P ஐயா!

அருள்ஞான சித்த இல்லம். ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்.

23, மேபீல்ட் ரோட் கொழும்பு - 13. தொ.பே: 011 2342463, 011 2342464, 011 2470615

நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி இல்லம்

இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

நுவரெலியாவிலும் ராகு கால பூஜை தினந்தோறும் நடைபெறும்.

(C/1185)



## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1186)


# புதிய பணியாளர் நியமனம்

யாழ்.சிறைச்சாலைக்கு புதிய ஊடக இணைப்பாளர் மற்றும் சிறைக்காப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிமாவட்டத்தில் இருந்து சிறைச்சாலைக்கு வருகை தந்தவர்களே நேற்று முன்தினம் தமது கடமையினை பொறுப்பேற்றுக்கொண்டுள்ளனர். இதுவரை காலமும் தமிழ் பேசும் ஒருவரே ஊடக இணைப்பா ளராக கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது கடமையேற்றுள்ளவர் சகோர மொழிபேசும் ஒருவராவார். (எஸ்)

மலர்கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் முழுவதும் காட்டி காகிதப்பூமாலை தொடுத்தால் பயன்என்ன? மாலைக்குமுதற்பொருள் மணமுள்ளமலர், அது போல பேச்சிற்கு முதற்பொருள் சுவையும், பயனுமுள்ள நல்ல கருத்துக்கள். - அறிஞர் அண்ணா-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## இன்புற்றிருக்கும் மனித உரிமை

‘வாழ்வின் எல்லா நிகழ்வுகளும் கனவுகள் அல்லது பிரமைகளே!’ என்கிறது ஸென் பௌத்தம். “வாழ்வு முற்றும் கனவெனக் கூறிய மறைவலோர் தம் உரை பிழையன்று காண்” என்று அதை வழிமொழிந்து தன் சுயசரிதையைத் தொடங்குகிற பாரதி, “உலகெலாமொர் பெருங்கன வஃதுளே உண்டு உறங்கி இடர் செய்து செத்திடும கலகமானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர் கனவினுங் கனவாகும்” என்கிறான்.

மனிதர்கள் எல்லோர்க்கும் கனவுகள் உண்டு. அடிப்படைத் தேவைகள் கூட இங்கு பலருக்கு கனவாகவே இருக்கிறது. உண்ண உணவு, உடுக்க உடை, தங்க இடம்... இவற்றோடு வலியவர்களாலும் வெற்று வாய்சாலகர்களாலும் பறிக்கப்படாத நிம்மதியான ஓர் எளிய வாழ்க்கை. இதுவே கனவு! துண்டு நிலம், அதில் ஒரு குடில், அருகே பாயும் ஆறு, அதன்மேல் நிலவு, அதை ரசிக்கும் நிம்மதி... எல்லோருக்கும்தானே வேண்டும்?

நம்மை நாமே குறுக்கிக் கொண்டும், பிளவுபடுத்திக் கொண்டும் அழிந்துகொண்டிருப்பதையே விரும்புவது ரசிப்பது எல்லாம் எவ்வளவு அவலமான மனநிலை! குற்றச் செயல்கள் அதிகரிப்பதில் ஊடகங்களுக்கென்ன அவ்வளவு குதூகலம்? யாழ்ப்பாணத்தில் நிலைமை சீர்கெட்டுப் போகிறது என்றும், திருட்டும் கொள்ளையும் போதை வஸ்துப் பாவனையும் விபச்சாரமும் இன்னுமின்னும் குற்றங்களும் கலாசாரச் சீரழிவும் பற்றிப் புலம்புவதன் மூலம் யாரையோ குற்றம் சாட்டுவதாக இவர்கள் நினைக்கிறார்கள்.

ஆனால், இந்தக் கலாசார சீரழிவு, பொருளாதார பின்னடைவு, சொத்திழப்பு, மன உளைச்சல், உறுப்புக்களை – கணவர்மாரை – பிள்ளைகளை – பெற்றோரை இழந்த பரிதவிப்பு என்று எல்லாவற்றுக்கும் வேறு யாரோ மட்டும்தான் காரணமா? இவற்றுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் தமிழ்த் தரப்பில் யாருமில்லையா?

இந்த இன்றைய நிலைமை உருவாகுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு சிறு முனகல் குரலாவது இவர்கள் எழுப்பியதுண்டா? இந்த அழிவுப்பாதை நோக்கிச் சமூகம் நகர ஆரம்பித்த காலத்தில் எதுவுமே புரியாத பச்சைப் பிள்ளைகளாகவா இவர்கள் இருந்தார்கள்? இல்லையே... இந்த நிலைமைக்கு வந்துசேர நிலபாவாடை விரித்துத் தானே எழுதிக் கொண்டிருந்தார்கள். விதவிதமாய் உணர்ச்சிகர விளக்கங்களை மக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்போதும், மக்களது அவலங்களைப் புரிந்துகொண்டு பேசுவதாகவா இவர்களது பேச்சு இருக்கிறது? தின்று கொழுப்பூறிய சவால்களுடனல்லவா பகைநச்சுச் சூழலை வளர்த்தெடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள்!

இவர்களது பாதைகளில் சிக்குண்டு, மேலும் மேலும் எமது மக்கள் சிதைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதானே உண்மை! நடைபெற்றுக்கொண்டிருக்கிற தீமைகள், அவலங்கள் எல்லாம் நிலைப்பதிலும் வளர்வதிலும் இவர்கள் யாருக்கும் பங்கில்லையா?

பகையுணர்ச்சியும் வன்மமும் வறட்டு ரோஷங்களும் நம் வாழ்வை அழிப்பதைத் தெரிந்துகொள்வோம். ராமனது அம்பினால் தன் மனதில் ஏறி இறுகியிருந்த சுமைகள் கழிந்து, வீழ்கிற நிலையில் ராவணனின் முகம் முன்மடங்கு பொலிந்தது என்று கம்பன் சொல்கிறான். அது உண்மையாகவே இருக்கும். ஆதிக்க உணர்வு அழிந்து, வெறுப்பும் வீம்பும் அகன்று, ஓர் எளிய உண்மையான மனிதனாகி விடுவதில பேரின்பம் உண்டாவது சாத்தியமே. மனிதன் தன்னைத்தானே அவலப்படுத்திக் கொள்கிற பிடிவாதங்களுக்கு விடைகொடுத்தால் மகிழ்ச்சியான விடுதலையுணர்வு சாத்தியம் என்பதையே ராவணனிடம் காண்கிறோம்.

மேதைமை மிக்க திரைப்பட இயக்குனரான அகிரா குரோசாவா தன் படங்களைப் பற்றிச் சொல்லுகையில்: “உலகெங்கிலும் மக்கள் தாமே தமக்குத் துன்பத்தை உண்டுபண்ணுவதற்கு முனைவதாகவே தோன்றுகிறது. இப்பொழுதை விட இன்புற்றிருப்பதற்கு மனிதனுக்கு உரிமை உண்டு. அச் செய்தியைத்தான் நான் உணர்த்த முயன்றிருக்கிறேன்.” என்று சொன்னார்.

மக்கள் இன்புற்றிருக்கும் அந்த உரிமையைத் தடுத்துக் கொண்டிருப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தத்தம் மனதில் புதைந்துள்ள துவேசத்தையும் வன்முறையையும் உணர்ந்து அதை விலக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அந்த முயற்சியில் ஈடுபடாதவர்களுக்கு, தமக்குள் மறைந்து கிடக்கும் துவேசத்தை தம்மால் அறிய முடியாமல் போகும். நம் துன்பங்களுக்கான பழியை எப்போதும் மற்றவர்களின் மீதே போட்டுக்கொண்டு மீளமுடியாமல் மறுகுவதாக இருக்கும்.

- ஆசிரியர் -

# இனவாதக் கொள்கை ஜே.வி.பி.யிடம் இல்லை

## என்கிறார் சோமவன்ச

(கொழும்பு)

தமிழ், சிங்களம், முஸ்லிம் மற்றும் ஏனைய சமூகம் என்ற ரீதியிலான இனவாதப்போக்கோ, கொள்கையோ ஜே.வி.பி.யிடம் கிடையாது. எனினும், அண்மைக்காலத்தில் தமிழ் இனவாதத்திற்கு ஜே.வி.பி.யை அடிமைப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட முயற்சி தோற்கடிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

திஸ்ஸமகாராம தெபரவெளவில் நடைபெற்ற விசேட சம்மேளனத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏகாதிபத்தியத்துடன் இணைந்து இன்று ட்ரொஸ்கிசம் எழுந்து நிற்கின்றது.ட்ரொஸ்சிசத் தலைமைத்துவத்துடனான புரட்சி இன்று எந்த நாட்டிலாவது இருக்கின்றதா? அப்படி எந்த நாடுமே இல்லை.ட்ரொஸ்சிச வாதத்துக்கு புரட்சிக்கான தலைமைத்துவத்தை வழங்கடியாது.இது புரட்சி என பேசிக்கொண்டிருப்பவர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

இவ்வாறான ஒரு தரப்பினர் ஜே.வி.பி.க்குள்ளும் இருந்தனர். இருப்பினும் அவர்கள் இனறு தோல்வியைத் தழுவிக் கொண்டுள்ளனர். கட்சிக்குள் கடந்த காலங்களில் குழுவாக செயற்பட்டு வந்தவர்களும் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். எனவே எதிர்காலத்தில் இவ்வாறு குழு அமைத்து செயற்படுகின்ற நிலைமைக்கு இடமளிக்க முடியாது. கட்சிக்கொள்கை என்பது முக்கியமானது. அதே போன்று அமைப்பு ஒன்றாகவே இருத்தலும் அவசியமாகும்.

சோஷலிச சமூகம் ஒன்றினை நாட்டில் கட்டியெழுப்ப வேண்டிய தேவை எழுந்திருக்கின்றது. இதற்கு சகலரினதும் இணக்கப்பாடு அவசியமாகும். கட்சிக்குள் ஜனநாயகம் இருக்க வேண்டுமானால் அங்கு இணக்கப்பாடுகள் இருக்க வேண்டும்.

அரசியல் ரீதியாக கட்சி பின்னடைவு கண்டிருக்கின்றது. ஏற்றுக்கொள்ள வேண்டியது தான் பின்னடைவு குறித்து மாத்திரமே சிந்திக்கும் பட்சத்தில் அது எந்தக் கட்சியாக இருந்தாலும் எந்த அமைப்பாக இருந்தாலும் முன்னோக்கிச் .செல்ல முடியாது. அது இன்று நிரூபனம் ஆகியிருக்கின்றது.

பிறந்திருக்கும் புதிய ஆண்டை போராட்டம் மிக்க ஆண்டாகவும் வெற்றிகளைப் பெற்றுக் கொள்கின்ற ஆண்டாகவும் மாற்றியமைக்க வேண்டும். இதற்காக எம்மிடம் மிகப் பெரிய பொறுப்பு இருக்கின்றது. ஜே.வி.பி.யானது தமிழ்,சிங்கள,முஸ்லிம் மற்றும் ஏனைய சமூகம் என்ற வகையில் எந்தவொரு இனவாதப் போக்கினையும் கொண்டிராத கட்சியாகும். இதனை ஜே.வி. பி.யின் தலைவர் ரோஹண விஜேவீரவே கூறியிருக்கின்றார். அதனை அவர் தோற்கடித்தும் இருக்கின்றார்.

இதேபோன்று தான் அண்மைக் காலங்களில் தமிழ் இனவாதத்துக்கும் ட்ரொஸ்கிஸத்துக்கும் ஜே.வி.பி.யை அடிபணியவைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் அதற்கான குழுவும் தோற்கடிக்கப்பட்டிருப்பதை இங்கு கூற வேண்டும் என சோமவனச அமரசிங்க கூறியுள்ளார்.

# மருந்துப் பொருட்கள் காவுதல் தகுதியான வாகனங்களில் மட்டும்

(கொழும்பு)

மருந்துப் பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் பதிவுசெய்யும் நடவடிக்கையை கட்டாயமாக்குவதற்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தீர்மானித்துள்ளது. மக்களுக்கு உரிய தரத்தினைக் கொண்ட மருந்துப் பொருட்களை விநியோகிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெனரக குறிப்பிட்டார்.

தகுதியான வாகனங்களில் மருந்துப் பொருட்கள் கொண்டுசெல்லப்படாத காரணத்தினால் அவற்றுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாக பணிப்பாளர் கூறினார். கடந்த காலங்களில் அவ்வாறான 20 வாகனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக டாக்டர் ஹேமந்த பெனரக தெரிவித்தார். இந்த சட்டம் நடைமுறையிலுள்ள போதிலும் அது உரிய முறையில் பின்பற்றப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ். வரும் புலம்பெயர் புலிகள் முன்னாள் போராளிகளுடன் பேச்சு

## என்கிறது திவயின

(கொழும்பு)

கனடா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளில் இருந்து உறவினர்களைப் பார்க்க வருவதாக கூறி, சுற்றுலா விசா அனுமதி பெற்று இலங்கை செல்லும் புலம்பெயர் நாடுகளில் உள்ள புலிகளின் தரப்பினர், யாழ்ப்பாணத்திற்கு சென்று, முன்னாள் போராளிகளை சந்தித்து இரகசிய பேச்சுக்களை நடத்தியிருப்பதாக திவயின தெரிவித்துள்ளது.

இதனால் புலிகளின் சகல செயற்பாடுகள் தொடர்பாகவும் கடும் அவதானத்துடன் இருக்குமாறு புலனாய்வு பிரிவினர் வடக்கில் உள்ள பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் முன்னாள் புலிப்போராளிகளை தூண்டிவிட முயற்சித்தவர்களுக்கு பாதுகாப்புப் படையினர் கடும் எச்சரிக்கை விடுத்திருந்தனர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் புலிகளின் உறுப்பினர்களை ஒன்றிணைத்து மீண்டும் விடுதலைப்புலிகள் அமைப்பை ஆரம்பிக்க புலிகளின் சர்வதேச வலையமைப்பு இரகசியமாக மேற கொண்டுவரும் திட்டம் குறித்த தகவல்கள் பாதுகாப்பு தரப்பினருக்கு தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இணையம் மற்றும் கையடக்கத் தொலைபேசி வசதிகள் கிடைத்துள்ளதால், லக்ஷான்பேர்க், டொரன்டோ, ஒஸ்லோ ஆகிய நகரங்களில் இருந்து செயற்படும் புலிகளின் சர்வதேச தலைவர்கள் ஏனைய புலி உறுப்பினர்களுடன் தொடர்நதும் உரையாடி வருவதாக தெரியவந்துள்ளது எனவும் திவயின தெரிவித்துள்ளது.

# பெறுபேறுகள் தொடர்பாக 16 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

வெளியாகியுள்ள உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக 16 முறைப்பாடுகள் கிடைத்துளளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் சட்ட செயலாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இதன்போது மாணவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என செயலாளர் தெரிவித்தார். கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கைகளின் போது முறையான விதிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா அல்லது இதற்கு வேறு காரணங்கள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பிலும் விசாரணைகளின்போது கவனம் செலுத்தப்படவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது.

பெறுபேறுகள் தொடர்பான வேறு பிரச்சினைகள் காணப்பட்டால் அதனை ஆணைக்குழுவிடம் தெரிவிக்குமாறும் நிமல் புஞ்சிஹேவா மேலும் தெரிவித்துள்ளார்.

# உதயதாரகை மகளிர் அமைப்பிற்கு அமைச்சர் டக்ளஸ் நிதியுதவி

உதயதாரகை மகளிர் அமைப்பினர் மற்றும் அச்சுவேலிப் பகுதி மக்களை நேற்றுக் காலை 9 மணிக்கு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அச்சுவேலி ஈ.பி.டி.பி. கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் உதயதாரகை மகளிர் அமைப்பிற்கு ஒரு இலட்சம் ரூபா காசோலையை அமைச்சர் வழங்கினார்.

மேற்படி அமைப்பு ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இ. ஐங்கரனிடம் விடுத்த கோரிக்கையை அடுத்தே இவ் உதவி வழங்கப் பட்டுள்ளது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கம லேந்திரன், கோப்பாய் பிரதேச அமைப்பாளர், அச்சு வேலி பிரதேச அமைப்பாளர் தர்மராசா ஆகி யோர், கலந்துகொண்டனர்.

மேலும் அமைச்சர் பொது மக்களுடன் கலந் துரையாடியதுடன் அவர்களது பிரச்சினைகள் தேவைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார். (135)

# யாழ். மாநகர சபையினால் வீதிப் புனரமைப்புப் பணிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினால் சில வீதிகளின் புனரமைப்புப் பணிகள் தற்போது முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

இதன்படி சபை எல்லைக்குட் பட்ட கோவில் வீதி, கொய்யாத் தோட்ட 3ஆம் குறுக்கு வீதி, கடைச் சாமி வீதி, பிளேச்சர் ஒழுங்கை ஆகியவற்றை புனரமைக்கும் பணிகளே ஆரம்பிக்கப்பட்டுள் ளது. இவ்வீதிப் பகுதிகள் குண் டும் குழியுமாக மிக மோச மடைந்து காணப்பட்டதுடன் போக்குவரத்துக்களும் பெரும் சிரமத்தின் மத்தியில் நாளாந்தம் இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில் பொதுமக் களின் இவ்வாறான சிரமங் களைக் கருத்திற் கொண்டு இலகுவாகப் போக்குவரத்தை மேற்கொள்ளும் வகையில் யாழ். மாநகர சபையினால் இப்புனர மைப்புப் பணிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளது.

# வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் ஆசிரியர் இடமாற்றத்தில் முறைகேடு

(நெல்லியடி)

வடமாகாணக் கல்விப் பணிப் பாளரின் சுற்று நிருபம் மற்றும் வடமாகாண ஆளுநரின் அறிக்கை களுக்கேற்ப ஏனைய கல்வி வலயங்களில் ஆசிரியர் இடமாற் றங்கள் செய்யப்படும்போதும், வவு னியா வடக்கு, வலயத்தில் ஆசிரி யர் இடமாற்றத்தில் முறைகேடு நிகழ்வதாக ஆசிரியர்கள் விச னம் தெரிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் அதிகாரி களின் மட்டத்திலேயே இடமாற் றம் நடைபெற்றதாகவும், ஆனால் தற்போது இடமாற்றச் சபை களுடாகவே இவ் இடமாற்றங் கள் நடைபெற்றிருந்த போதும் இவ் முறைகேட்டிற்கு தொழிற் சங்கங்களும் மௌனமாக இருந் ததற்கான காரணம் என்ன என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ள னர்.

இடமாற்றச் சபைகள், கடந்த வருடம் மூன்று தடவைகள் கூடப் பட்டபோது தனது மேன்முறை யீடுகளை இச்சபை நிராகரித் தது. ஆனால் ஒரே குறித்த காலத்தில் உள்ளவர்களில் சில ருக்கு இடமாற்ற அனுமதி வழங் கப்பட்டபோதும் தாம் நிராக ரிக்கப்படுவது ஏன் எனவும் அவர் கள் தெரிவித்துள்ளனர்.

சிலரது காலங்களை கணிப் பீடு செய்யும்போது தாம் தவறி ழைத்து பின்னர் எமக்கு காலம் காணாது என காரணத்தைக் குறிப் பிடுகின்றனர். இன்னும் சிலருக்கு தங்களின் பாடத்திற்கு ஆசிரியர் பற்றாக்குறை எதனால் அனுப்ப முடியாது எனவும் சில கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு சிலருக்கு மட்டும் சலுகை கள் வழங்கப்பட்டு தாம் புறந் தள்ளப்பட்டால் எம்முடன் பாதிக் கப்பட்ட ஆசிரியர்கள் அனை வரும் மனித உரிமை ஆணைக் குழு மூலமோ அல்லது அவ் வவ் கல்வி வலயங்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கை எடுக்கவோ தயங்கமாட்டோம் எனவும், எமக்கு பக்கபலமாக இருக்கும்.

இலங்கை ஆசிரியர் சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம் மற்றும் தொழிற்சங்கங்கள் இதனைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ள னர். (12)

# யாழில் பரவி வருகிறது உண்ணிக் காய்ச்சல் நோய்

(திருநெல்வேலி)

யாழ். மாவட்டத்தில் சமீப காலமாக உண்ணிக் காய்ச்சல் (Pyphus Fever) என்னும் ஒரு வகை நோயினால் பலர் பாதிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அநேகமாக இந்நோய் மிருகங் களிலிருந்து வெளிப்படும் தெள்ளு, உண்ணி போன்றவற்றி லிருந்து பரவும் கிருமிகள் மனி தர்களின் உடலுக்குள் சென்று தாக் கத்தை ஏற்படுத்துவதால் உண் டாகின்றது எனத் தெரிய வரு கிறது.

இக்காய்ச்சலினால் பீடிக்கப் பட்டவர்களுக்கு உடம்பில் சிறிய தொப்பளம் போன்ற பருக்கள் காணப்பட்டு தொடர்ச்சியாகவும் விட்டு விட்டும் காய்ச்சல் காணப் படுகின்றது.

இவ்வாறான பலர் போதனா வைத்தியசாலையிலும், சிலர் தனியார் வைத்தியர்களிடமும் சிகிச்சை பெற் றுள்ளனர். அண் மைக்காலத் தில் அதிகமானோர் இந்நோயினால் பாதிக்கப்பட்ட னர் என அறிய வருகின்றது.

சருகுகள், புல்லுகள், பற் றைகளிலிருந்தும் இக்கிருமிகள் தொற்றுவதற்கு வாய்ப்புள்ள தாகக் கூறப்படுகிறது.

விலங்குகளிடமிருந்து விலத் தியிருப்பது இந்நோய் ஏற்படா மல் இருப்பதற்கு ஏதுவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# யாழ். சர்வோதய அலுவலக புதிய கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சர்வோதய நிலையமும் மற்றும் பலநோக்கு சமூகமையமுமடங்கிய புதிய கட்டடம் இல: 568, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவ ரியில் நாளை மறுதினம் வெள்ளிக கிழமை காலை 9.00 மணியள வில் வைபவரீதியாக சர்வோ தய நிறுவனத்தின் ஆரம்ப ஸ்தாபகரும் தலைவருமாகிய கலாநிதி ஏ.ரி. ஆரியரத்னாவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சர்வோதய நிறு வனத்தின் நிறைவேற்று உத்தி யோகத்தர்கள் உட்பட தென்னி லங்கையில் இருந்து சுமார் 400 பிரதிநிதிகளும், யாழ். மாவட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங் களின் சிரேஷ்ட உத்தியோகத் தர்களும் கலந்து சிறப்பிக்கவுள் ளார்கள்.

# ப.தெ.வ.கூ. சங்க நிர்வாகிகள் ஆளுநருடன் விசேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளுடன் மாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி இன்று சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் வவுனியா மாவட்டங்களில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது, கூட்டுறவு அமைச்சர் ஜோன்சன் பெர் னாண்டாவுடன் மேற்படி சங்கங்களின் பிரதிநிதிகள் மேற்கொண்ட சந்திப்பும் அமைச்சரிடம் வழங்கிய கோரிக்கைகள் தொடர்பாகவும் ஆளுநர் கலந்துரையாடவுள்ளார்.

# வவுனியா மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(வவுனியா)

விவசாய சேவைகள் மற்றும் வனவிலங்கு பராமரிப்பு அமைச் சர் எஸ். எம். சந்திரசேன வவு னியாவிற்கு நேற்று விஜயம் மேற்கொண்டு அங்குள்ள மாண வர்களுக்கு கற்றல் உபகரணங் களை வழங்கி வைத்தார்.

வவுனியா மடுக்கந்த மகாவித தியாலயத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் அமைச்சருடன் அமைச்சு அதிகாரிகள் பொதுமக் கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள், கொப்பி கள் மற்றும் பாடசாலை உபகர ணங்கள் என பல பொருட்கள் வழங்கப்பட்டன.

மேலும் பாடசாலை மாணவர் களின் அணிவகுப்பும் மதகுரு மார்களின் உரைகளும் இடம்பெற் றதும் குறிப்பிடத்தக்கது. (125)

# கடமை பொறுப்பேற்றல்

(யாழப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாள ராக பதவியேற்ற எஸ். சத்திய சீலன் தனது கடமைகளை இன்று புதன்கிழமை பொறுப்பேற்க வுள்ளார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக கடமை யாற்றிய எல். இளங்கோவன் வட மாகாண ஆளுநரின் செயலாள ராக ஏற்கனவே நியமிக்கப்பட் டதை அடுத்தே இப்பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.(01)

# சல்பீனியம் அகற்றல்

(யாழ்ப்பாணம்)


யாழ். வீரசிங்கம் மண்டபத் திற்கு முன்பாகவுள்ள புல்லுக் குளத்தில் படர்ந்திருந்த சல்பீ னிய தாவரம் முற்றாக அகற் றப்பட்டுள்ளது.

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினால் முன்னெ டுக்கப்பட்ட இப்பணியில் பாரிய வலைகள் பயன்படுத்தப்பட்டு வள் ளங்களின் உதவியுடன் இத்தா வரம் அகற்றப்பட்டது.


இதேவேளை, இக்குளத்தில் காணப்பட்ட சேறும் யாழ். மாந கர சபையினால் பைக்கோ இயந திரம் மூலம் முற்றாக அகற்றப் பட்டுள்ளது.

தற்போது இக்குளம் தாவரம் மற்றும் சேற்று கழிவுகள் இன்றி சுத்தமாக காணப்படுகிறது.






வேலணைப் பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் புத்தாண்டை வரவேற்கும் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (85)



வடமாகாணசபையில் புதிதாக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஆளுநரின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது. இதில பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளராக பதவியேற்ற செல்வி ஆர். எஸ் துரைராஜாவுக்கும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பதவியேற்ற எஸ்.சத்தியசீலனுக்கும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி நியமனக் கடிதங்களை வழங்குவதைக் காணலாம்.



# குடாநாட்டு மின் விநியோகம் தொடர்பாக அமைச்சர் தலைமையில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நிலவுகின்ற மின்விநியோகம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து விரிவான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மாலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் மற்றும் இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொதுமுகாமையாளர் பிரியந்த குணதிலக்க ஆகியோரிடையே இவ்விடயம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அடிக்கடி மின்தடை ஏற்படுதல், மின்வலு குறைந்தளவில் விநியோகிக்கப்படல், மற்றும் வீதி விளக்குகள், மின் விநியோகத் துண்டிப்புக்கள் புதிதாக மின் இணைப்புக்களை வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன் போது இணக்கமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

மின் கட்டணம் உரிய முறையில் செலுததாதவர்கள் தொடர்பில் அவர்களுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டு ஓரிரு தினங்கள் அவகாசம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன் போது சுட்டிக் காட்டினார். இதற்குப் பொதுவான இணககம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# கணவனால் தாக்கப்பட்ட மனைவி வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

குடிபோதையில் இருந்த கணவனால் த்ாக்கப்பட்டு படுகாயமடைந்த மனைவி யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் இடம்பெற்றது. அரியாலை பகுதியைச் சேர்ந்த ஜெயராணி (வயது 43) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

புதுவருட தினமன்று குடிப்பதற்கு பணம்கேட்டவேளை தர மறுத்தமையினால் கோபமடைந்த அவரது கணவன் மனைவியின் முகத்திலும், கைகளிலும் தாக்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

(எப்.எஸ்)




யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரியில உந்தக் கண் கிளினிக்குக்கு தினமும் வந்து போற சனங்களின் பாடுகளைச் சொல்லி மாளாது.

விடியப் புறத்தோட பஸ்செடுத்து வந்து சேந்தா எல்லாரும் காட்டிக் கொண்டு போகவே முடியுது?

இதுக்குள்ள வேறை கண்ணைக் காட்ட வந்த சனத்தோட போட்டி போட்டுக்கொண்டு கண்காட்டுற இளசுகளும் நுழைஞ்சிடும்.

நூறு இருநூறு சன மெண்டு ஒருநாளைக்குப் படை எடுக்கும். இதில முப்பது புதிய நம்பரும், முப்பது பழைய நம்பரும் குடுப்பினம். அதைத் தவிர அவரைப்புடிச்சு இவவைப் புடிச்சு மேலும் பத்துப் பதினைஞ்சு பேரா ரெண்டிலும் சேர்த்து ஒரு நாளைக்கு நூறு பேர்தான் காட்ட முடியும்.

மிஞ்சின ஆக்கள் தூரம் துலையில இருந்தும் கிழமேல நாலைஞ்சு நாட்கள் திரிஞ்சுதான் காட்ட நேருது.

அதுக்குள்ள உந்தக் கிளினிக்கில கொஞ்ச நாளைக்கு முன்னால இருந்த பெரிய டாக்குத்தர் ஒருவர் இஞ்சை வாறவையில பசை உள்ள வயளைப் பாத்து வெளியால எடுத்து நல்லா உழைச்சுக் கொண்டு போட்டார்.

இப்ப அவரில்லை. எண்டாப்போல சனங்கள் தப்பீட்டுதே! கடந்த வாரமும் கொழும்பில இருந்து வந்த மருத்துவக் குழு கடமை நேரத்தில வெளி வைத்திய சாலைகளில் கடமேல இருந்ததைக் கண்டு பிடிச்சேண்டும் பேப்பரில வந்ததெல்லே!

முந்திச் சொன்ன கண் டாக்குத்தர் இஞ்சை இருக்கேக்க ஒரு நாளைக்கு ஒரு இலட்சம்படி மாதம் 30 இலட்சத்துக்கும் மேலால உழைச்சேண்டு கேள்விப்பட்டம்.

அவர் இருக்கேக்க தனிக்காட்டு ராஜாதான். வேலை செய்யிற உதவி டாக்குத்தர், நர்சுமார் அவரைக் கண்டால் நடுக்கம்தான்.

எனக்கொருக்கா கண்புரைச் சிகிச்சை செய்யேக்க மயக்க ஊசி போட்டு என்னைக் கட்டிலில் ஆயத்தமாக வளர்த்தி இருந்தனர்.

கடமைக்கு வந்த டாக்குத்தர் கைக்குப் போடும் கிளவுஸ் ஆயத்தமாக இல்லையெண்டு உதவியாளர்களைப் பேசிக்கொண்டு ஒரு பக்கமாகப் போயிருந்திட்டார்.

அரை மணிநேரத்துக்குப் பின்பாக எப்படியோ அதனை கொண்டு வந்து குடுத்த பின்புதான் சிகிச்சையை ஆரம்பிச்சார்.

விறைப்பூசியின் செயல் இழந்து கொண்டிருந்ததால் என்னால் வேதனையை உணரக்கூடியதாக இருந்தது.

எவ்வளவோ பொறுத்தும் அசையாமல் கிடக்க முடியவில்லை தலையில் இரண்டு தடவைகள் தட்டி எருமை மாட்டப்போல ஆட்டாதை எண்டு கடிந்து கொண்டார்.

அதுவே அப்பலோவிலெண்டா சும்மாவா சுளையாக 25, 27,30 ஆயிரங்களல்லவா கை மாறும்?

இன்னொருக்கா கண்காட்டவல்ல, கண்ணைக் காட்டப் போயிருந்த சமயம் வேறொரு நோயாளி முன்னதாக இவரோடு முரண்பா ஏற்பட்டிருக்க வேணும்.

யாருடையதோ சிபார்சுக் கடிதத்துடன் வந்திருந்தார். அந்தக் கடிதத்தைப் பார்க்காமலே கிழிச்சு வீசி நோயாளியையும் தாறுமாறாகப் பேசினார்.

இதெல்லாம் எதுக்கு அந்தச் சக்கரத்தாள்வானுக்கே வெளிச்சமெண்டில்லைப்பாருங்கோ எங்களுக்கே தெரியும். வாயுக்கை விரல் வைச்சாக் கடிக்கத் தெரியாதே...

# சிவில் வழக்குகளை விசாரிப்பதற்கு மன்னாரில் இலவச சட்ட ஆலோசனை

(மன்னார்)

மன்னாரில் "சகன்மா" என அழைக்கப்படும் இலவச சட்ட ஆலோசனை நிலையம் மன்னார் மாவட்ட சர்வோதய காரியாலயத்தில் இயங்கி வருவதாக மன்னார் மாவட்ட சர்வோதய அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் தெரிவித்தார்.

காணி வழக்கு, சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட பல்வேறு சிவில் வழக்குகளுக்கு மேற்படி இலவச சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருவதோடு நீதிமன்றத்தில் இலவசமாக வழக்கு விசாரணைகளும் செய்து கொடுக்கப்படுகிறது.

மேற்படி இலவச சட்ட ஆலோசனைகளை சட்டத்தரணி ஜெபநேசன் லோகு மேற்கொண்டு வருவதோடு நாளாந்தம் வழக்குகள் பதிவு செய்யப்படுவதாகவும் வாரத்தில் ஒரு நாள் சட்ட ஆலோசனைகள் வழங்கப்படுவதாகவும் மன்னார் மாவட்ட நீதிச் சேவை இணைப்பாளர் பிரதீபன் தெரிவித்தார்.

மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முதலாம் குறுக்குத் தெரு பெற்றா எனும் இடத்தில் அமைந்துள்ள மன்னார் சர்வோதய காரியாலயத்தை அல்லது 023-2222374, 077-8852439 எனும் தொலைபேசி இலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மன்னார் மாவட்ட சர்வோதய அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் தெரிவித்தார்.

## வல்வெட்டித்துறை நகரசபைக்கான புதிய கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபைக்கான புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை நகரசபைக்காக முத்துமாரி அமமன் ஆலயத்திற்கு வடககுப் புறமாக ஏற்கனவேகட்டடப்பணி ஆரம்பித்து நிதிப் பற்றாக் குறையினால் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது இந்நிலை யில் நகரசபைக்கான கட்டடத்தின் கட்டுமானப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்காக நகரபிதா எடுத்த முயற்சியினால் 'என்றிப்' செயற்திட்டப் பணிப்பாளரும் பொறியியலாளருமான கலாநிதி எஸ்.சிவகுமாரின் உதவியினால் இப்பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக என்றிப் செயற்திட்டத்தினால்,15 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 200 நாள் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் டயாகொன் ஸ்ரக்ரர்ஸ் நிறுவனத்தினால் இரவு பகலாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் முத்துமாரி அம்மன் ஆலய பெருந்திருவிழாவுக்குள் இந்தக் கட்டடப் பணிகளைப் பூர்த்தியாக்கி ஒப்படைப்பதாக அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தமையால் வேலைகள் விரைவாக நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 62 பயனாளிகளுக்கு மலசலகூடங்கள் வழங்கல்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை பிரதேச சபை யு.என்.டி.பி.யின் அனுசரணையுடன் 62 பயனாளிகளுக்கு மலசல கூடங்களை அமைத்து வழங்கவுள்ளது.

இம்மலசல கூடங்களை அமைப்பதற்கான முதலாம் கட்டகொடுப்பனவுகள் பயனாளிகளுக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி ஒவ்வொரு மலசல கூடமும் சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியில் அமைதது்க் கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

## வவுனியா, நெடுங்குளம் பகுதியில் குளத்தில் வீழ்ந்து ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியா, நெடுங்குள பகுதியிலுள்ள குளதில் வீழ்ந்த ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பலியாகியுள்ளார். புதுவருடப் பிறப்பை முன்னிட்டு நண்பர்களுடன் குளக்கரையில் பொழுதைக் கழிக்கச் சென்ற சமயம் குளத்தில் வீழ்ந்து மரணித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் தொழில்நுட்ப உத்தியோகஸ்தராகப் பணியாற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த 22 வயதான நித்தியானந்தனே உயிரிழந்தவராவர்.

குளத்திலிருந்து மீட்கப்பட்ட சடலம் மட்டக்களப்பிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இம்மரணம் தொடர்ப்ான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# வடமராட்சிக்கு பெருமை சேர்த்தவர்கள்

வடமராட்சிப் பாடசாலைகளில் கல்வி கற்று உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களின் உள்ளக் கிடக்கைகள்.

## உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்தாலும் கல்வியில் வீழ்ச்சியடையாத கல்லூரி



எனது பெயர் சிவஞானசெல்வம் யோகினி. நான் உயிரியல் பிரிவில் தோற்றி 3ஏ பெறுபேற்றுடன் மாவட்ட நிலையில் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளேன். நான் தரம் 1 முதல் 5 வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் தரம் 6 முதல் 8 வரை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் பின்னர் உயர்தரம் வரை யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் கல்வி கற்றேன். எனது ஊர் தம்பசிட்டி ஆகும். எனது அப்பா ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர். எனது அம்மா வீட்டுப் பணி செய்து வருகிறார். நான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 134 புள்ளிகளையும், க.பொ.த. (சா/த) பரீட்சையில் 9ஏ ஐயும் பெற்றேன். எனது சகோதரர், சகோதரிகள் கல்வி கற்று வருகின்றனர்.

எமது பாடசாலை இதுவரை காலமும் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்தாலும் பாடசாலைக் கல்வி, விளையாட்டுத் துறையில் வீழ்ச்சி அடைந்தது இல்லை.

எனது இப்பேறுபேறைப் பெற உறுதுணையாக இருந்த பாடசாலை அதிபர், ஆசிரியர், தனியார் கல்வி நிறுவனத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## உதவிக் கரம் நீட்டிய பாடசாலை



எனது பெயர் மாதங்கி கிருஷ்ணமூர்த்தி. நான் ஆங்கில மொழி மூலம் விஞ்ஞானப் பிரிவில் தோற்றி ஏ,2சி பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டேன். மாவட்ட நிலை 184 தரம் 1 முதல் 5 வரை யாழ். கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தில் கற்றுக் கொண்டேன். தரம் 6 முதல் 11 வரை யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கற்றேன். க.பொ.த. சாதாரண தரத்தில் 6ஏ,பி,சி, எஸ்ஐ பெற்றுக் கொண்டேன். தரம் 5 புலமைப் பரிசிலிலும் 139 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றேன். க.பொ.த. உயர் தரத்தில் ஆங்கில மொழி மூலம் கற்க வேண்டும் என்ற அவா எனது குடும்பத்தாருக்கும் எனக்கும் இருந்த போதும் பல பாடசாலைகள் வடமராட்சியில் க.பொ.த. உயர்தரத்தில் ஆங்கில மொழி மூலம் கற்பிக்க முன்வராத போது யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையே எங்களுக்கு உதவிக் கரத்தை நீட்டியது.

அந்த வகையில் எமது பாடசாலைக்கு மிகவும் நன்றிக் கடன் பட்டுள்ளேன். எனது பாடசாலை அதிபர், எனது ஆசிரியர்கள் பெற்றோர்கள் எனது அண்ணா மயூரேசன் (க.பொ.த. உயர் தரத்தில் கணிதப் பிரிவில் கற்று சிறப்பான பெறுபேற்றைப் பெற்று மொறட்டுவ பல்கலைகழகத்தில் பொறியியல் 1ஆம் வருடத்தில் கற்று வருகிறார்.) இவர்கள் அனைவரது ஆதரவும் மேலும் தனியார் கல்வி நிலையத்தின் உதவியுடனுமே என்னால் இந்தப் பெறுபேற்றை அடைய முடிந்தது.

எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது பாடசாலையில் போதிய ஆளணி வளப்பற்றாக்குறை இருந்த போதும் நான் 100 சதவீதம் சித்தி எய்தியமையை இட்டு மன மகிழ்வு அடைகின்றேன்.

## அடைக்கலம் கொடுத்த அதிபர்



எனது பெயர் மேனகா அரியநாயகம். நான் விஞ்ஞானத்துறையில் ஆங்கில மொழி மூலத்தில் க.பொ.த. உ/தரத்திற்குத் தோற்றி ஏ,2பி பெறுபேற்றைப் பெற்றுள்ளேன். நான் தரம் 1இல் யாழ். புற்றளை மகா வித்தியாலயத்தில் கற்று தரம் 2 முதல் 11 வரை யாழ். வட இந்து மகளிர் கல்லூரியில் கற்று எனது உயர் கல்வியை யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையில் கற்றேன். உயர் தரக் கல்வியை ஆங்கில மொழியில் கற்றவேண்டும் என்ற மன உறுதியுடன் இருந்த எனக்கு வடமராட்சியில் பல பாடசாலைகள் பின்வாங்கியபோதும் யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் அடைக்கலம் கொடுத்தார். தரம் 5 புலமைப் பரிசிலில் 131 புள்ளிகளையும், க.பொ.த. (சா/த)இல் 8ஏ,1பிஐயும் பெற்றேன். எனது தந்தை காலமாகிவிட்டார். எனது அண்ணா புலோலி ப.நோ.கூ. சங்கத்தில் கிளை முகாமையாளராகப் பணி புரிகிறார்.

ஆங்கில மொழியில் கற்கவேண்டுமென்ற கனவை நனவாக்கிய எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிலையத்திற்கும் மிகவும் நன்றிக் கடன் பட்டுள்ளேன். நான் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் வலைப்பந்தாட்ட அணி உறுப்பினராகவும் கடந்த வருடம் மென்பந்து கிரிக்கெட் அணித் தலைவராகவும் தேசிய ரீதியில் பங்கு கொண்டேன்.

ஆங்கில மொழியில் இம்முறை வடமராட்சியில் முதன் முறையாக தோற்றிய எமது பாடசாலை மாணவர்கள் 100 சதவீதம் சித்தியைப் போதிய ஆளணி வளம் இன்றியும் பெற்றமை சவாலான விடயமாகும்.

## உச்சப் பயனைப் பெறுவதற்கு மன அமைதியுடன் கற்கவேண்டும்



எனது பெயர் நவராணி கிருஸ்ணமூர்த்தி. நான் கலைப் பிரிவில் தோற்றி 3ஏ பெறுபேற்றுடன் மாவட்ட நிலையில் 10ஆம் இடத்தைப் பெற்றுள்ளேன். நான் ஆரம்பக் கல்வியை யாழ். தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையில் பயின்றேன். பின்னர் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்றேன்.

நான் புலோலியில் வசித்து வருகின்றேன். நான் பரீட்சையில் 110 புள்ளியைப் பெற்று எட்டு புள்ளிகளால் சித்தியடையவில்லை. எனினும் எனது முயற்சியால் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 6ஏ,2பி,சி ஐப் பெற்றேன். எனினும் எனக்கு இயல்பாக சமூக, பொருளாதாரத்துறையில் இருந்த ஈடுபாடு காரணமாக கலைப் பிரிவைச் தேர்ந தெடுத்தேன்.

கலைப்பிரிவில் தமிழ், புவியியல், இந்து நாகரிகம் என்பவற்றை கற்றேன். நான் இப்பெறுபேற்றைப் பெறு வதற்கு எனது குடும்பத்தினர் பல வழி களிலும் பேருதவியாக இருந்தனர். பல கஷ்டங்களை எதிர்கொண்டபோதும் எச்சூழ்நிலையிலும் அதனை வெளிக் காட்டாது எனது அம்மா சிறந்த முறையில் வளர்த்து வந்தார்.

அது மட்டுமன்றி அப்பா மற்றும் சகோதர, சகோதரிகளும் மிகவும் உறுதுணையாக இருந்ததால் நான் இப்பேறுபேற்றை அடைய முடிந்தது. எனது அக்காவும் பல்கலைக்கழகத்தில் கற்று வந்ததனால் எனக்கு ஏற்படும் சந்தேகங்களை வீட்டிலேயே தீர்க்க முடிந்தது. எனக்குக் கிடைத்த இச் சந்தர்ப்பத்தில் எனது பெறுபேற்றுக்குக் காரணமாக இருந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் நண்பர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். எவ்வளவு நேரம் படிக்கின்றோம் என்றில்லாது கிடைக்கின்ற நேரத்தில் மன அமைதியோடு உச்சப்பயனைப் பெற முயலவேண்டும். இறை நம்பிக்கையோடும், தன் நம்பிக்கையோடும் கற்பதன் மூலம் குறித்த இலக்கை அடைய முடியும். எதிர்காலத்தில் சிறந்த விரிவுரையாளராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.

நேர்காணல் விசிந்தன்

# வலய முன்னேற்ற ஆளுகைச்சபை மேற்பார்வை நடத்த அழைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் கீழ்க்காட்டப்படும் அட்டவணைப்படி வலய முன்னேற்ற ஆளுகைச்சபை மேற்பார்வை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி சபையின் அங்கத்தவர்கள் குறித்த தினத்தில் சமூகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

9/1/2012 யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, 16/01/2012 யா/வரணி ம.வி., 23/01/2012 யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 30/01/2012 யா/சாவகச்சேரி இந்து கல்லூரி, 6/2/2012 யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 13/02/2012 யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., 27/02/2012 யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., 5/3/2012 யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தி., 12/3/2012 யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி., 19/03/2012 யா/மீசாலை வீரசிங்கம் ம.வி., 26/03/2012 யா/உசன் இராம நாதன் ம.வி., 23/04/2012 யா/நாவற்குழி ம.வி., 7/05/2012 யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., 14/05/2012 யா/மீசால்லை விக்னேஸ்வரா ம.வி., 21/05/2012 யா/வரணி ம.வி., 28/05/2012 யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, 11/06/2012யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தி., 18/06/2012 யா/சாவகச்சேரி இந்து கல்லூரி, 25/06/2012 யா/மீசாலை வீரசிங்கம் ம.வி., 02/07/2012 யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., 09/07/2012 யா/உசன் இராமநாதன் ம.வி., 16/07/2012 யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 23/07/2012 யா/நாவற்குழி ம.வி., 03/09/2012 யா/நாவற்குழி ம.வி., 10/9/2012 யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி., 17/09/2012 யா/சாவகச்சேரி இந்து கல்லூரி, 24/09/2012 யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, 1/10/2012 யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., 8/10/2012 யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தி., 15/10/2012 யா/வரணி ம.வி., 22/10/2012 யா/உசன் இராமநாதன் ம.வி., 5/11/2012 யா/மீசாலை வீரசிங்கம் ம.வி., 12/11/2012 யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 19/11/2012 யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

## கல்வி வளர்ச்சிக்கு உதவும் நூல்கள் அமைச்சின் விற்பனை நிலையத்தில்

கல்வி அமைச்சின் புதிய நூல் விற்பனை வளர்ச்சி மையத்தில் மாணவர்களின் கல்விக்கு உதவக் கூடிய நூல்கள் உள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த 23ஆம் திகதி கல்வி அமைச்சின் வளாகத்தில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட புதிய நூல் விற்பனை வளர்ச்சி மையத்தின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் தனதுரையில், நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இருந்து அமைச்சுக்கு வரும் மக்களுக்கு அமைச்சின் நுழைவாயிலுக்கு அருகில் திறந்து வைக்கப்பட்டிருக்கும் இந்த மையத்தில் அவர்களின் பிள்ளைகளுக்குத் தேவையான நூலகளை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள முடியும். அதன் ஊடாக தரமான உயரிய நூல்களை பிள்ளைகள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். எதிர்வரும் காலத்தில் மிகவும் வெற்றிகரமான சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட அனைத்துலகத்தால் ஏற்றுக் கொள்ளத் தக்க நூல்கள் சிங்கள, தமிழ் மொழிகளில் 2012ஆம் ஆண்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் அச்சிடப்பட்டு வெளியிட திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

அத்துடன் பல்வேறு மீளாய்வுகளை பரவலாக்கி பரீட்சை வினா-விடை நூல்களை அச்சிட்டு வெளியிட கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டம் பாடசாலைப் பிள்ளைகளுக்கு பெரிய உதவியாக அமைந்தது. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஊடாக மிகச் சிறந்த செயற்றிறன் மிக்க பயன் நிறைந்த சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

# அவுஸ்ரேலிய வேகத்தில் சுருண்டது இந்திய அணி



(சிட்னி)

அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 191 ஓட்டங்களுக்குள் இந்திய அணி சுருண்டது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று சிட்னி மைதானத்தில் ஆரம்பமானது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இந்திய அணி ஆரம்பமே ஏமாற்றம் அளிக்கும் வகையில் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் கம்பீர் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த ராவிட், லக்ஸ்மன் ஆகியோரும் அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர். இந்நிலையில் ஜோடி சேர்ந்த சச்சின் சேவாக் இணையும் சிறிது நேரமே தாக்குப் பிடிக்க முடிந்தது. இருப்பினும் பின்னர் களமிறங்கிய டோனி இறுதி வரை போராடியபோதும் அவருக்கு எந்தவொரு வீரரும் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கவில்லை. இறுதியில் இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் டோனி ஆட்டமிழக்காது 57 ஓட்டங் களைப் பெற்றார். மற்றும் சச்சின் 41, சேவாக் 30, ஹோலி 23, அஷ்வின் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பட்டின்சன் நான்கு, பீற்றர் சிடில், ஹில் பென் ஹாஸ் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்ரேலிய அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. எட்டு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டு விக்கெட்டுக்களை அவுஸ்ரேலிய அணி பறிகொடுத்தது. 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாவது விக்கெட்டையும் இழந்



தது. இந்நிலையில் ஜோடி சேர்ந்த கப்டன் கிளார்க், பொண்டிங் இணை அணியை சரிவிலிலிருந்து மீட்டது. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை அவுஸ்ரேலிய அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் நான்காவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த பொண்டிங், கிளார்க் இணை 79 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றுள்ளது. இதில் கிளார்க் 47, பொண்டிங் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர். வீழ்த்தப்பட்ட மூன்று விக்கெட்டுக்களையும் சகீர்கான் கைப்பற்றினார்.

## கிரிக்கெட் சபையின் தலைவராக உபாலி



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக உபாலி தர்மதாஸ போட்டியின்றி தெரிவாகியுள்ளார். ஏழு வருடங்களின் பின் பதவிக்கு வந்த முதலாவது தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தலைவராக உபாலி தர்மதாஸ உள்ளார்.

உலக கிரிக்கெட் கிண்ணத்திற்கான போட்டியின்போது பொறுப்பிலிருந்த இடைக்கால சபையின் முன்னாள் செயலாளரான நிஷாந்த ரணதுங்க இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளராக தெரிவாகியுள்ளார். அஸங்க செனவிரத்ன, கே.மதிவாணன் ஆகியோர் போட்டியின்றி உப தலைவர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் பதவிக்கு போட்டியிட்ட சுமித் பெரேரா இறுதி நேரத்தில் தேர்தலில் இருந்து விலகிக்கொள்வதாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## சச்சினை வசைபாடும் அவுஸ். ஊடகங்கள்



(சிட்னி)

2008ஆம் ஆண்டு இந்தியா-அவுஸ்ரேலியா இடையே சிட்னியில் நடந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை குறிப்பிட்டு அவுஸ்ரேலிய பத்திரிகைகள் நேற்று முன்தினம் சச்சின் டெண்டுல்கரை திடீரென வசைபாடியுள்ளன. அந்த டெஸ்டில் இந்திய வீரர் ஹர்பஜன்சிங், அவுஸ்ரேலியாவின் சைமண்ட்சை இனவெறியுடன் திட்டியதாக கூறப்படும் புகாரில் முக்கிய சாட்சியாக டெண்டுல்கர் இருந்தார்.

அப்போது நடந்த விசாரணையின் போது, ஹர்பஜன்சிங்குக்கு ஆதரவாக இருக்கும் வகையில் அவர் முரணாக சாட்சியம் அளித்தார். அந்தச் சம்பவத்தில் டெண்டுல்கர் அளித்த சாட்சியை சில அவுஸ்ரேலிய வீரர்கள் இன்னும் மறக்கவில்லை. இதன் பிறகு சில அவுஸ்ரேலிய வீரர்கள் அவர் மீது வைத்திருந்த நன்மதிப்பை அவர் இழந்து விட்டார் என்று அவுஸ்ரேலிய பத்திரிகைகள் குறை கூறியுள்ளன.

## விலகினார் சோம்தேவ்

(சென்னை)

சென்னை ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் இருந்து விலகுவதாக இந்திய நட்சத்திர வீரர் சோம்தேவ் தேவ்வர்மன் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். அவரது விலகல் ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. ஏனெனில் இந்த போட்டியில் ஒற்றையர் பிரிவில் இந்தியாவுக்கு நம்பிக்கை அளித்த ஒரே வீரர் அவர் தான்.

2009ஆம் ஆண்டு இறுதிப்போட்டி வரை முன்னேறியவரான சோம்தேவ், தோள்பட்டை காயம் காரணமாக சென்னை ஓப்பனில் பங்கேற்க இயலாத நிலைமையில் இருப்பதாக போட்டி அமைப்பாளர்களிடம் கூறிவிட்டார். அவுஸ்ரேலிய ஓப்பனை மனதில் கொண்டு ஓய்வு எடுக்கும்படி வைத்தியர்கள் அறிவுறுத்தியிருப்பதாகவும், சென்னை ஓப்பனில் விலகுவது மிகுந்த ஏமாற்றம் அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நேர்மையான விருதுக்கு தகுதி பெற்றார் டோனி



(சிட்னி)

சர்வதேச விளையாட்டு பத்திரிகை சங்கத்தின் (ஏ.ஐ.பி.எஸ்.) நேர்மையான வீரர் விருதை தட்டிச் சென்றார் இந்திய கப்டன் டோனி.

கடந்த ஆண்டு டிரன்ட் பிரிட்ஜில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தின் இயன் பெல் சர்ச்சைக்குரிய முறையில் ரன் அவுட்டானார். இதில பெல்லை மீண்டும் துடுப்பாட டோனி அனுமதித்தார். டோனியின் இந்த செயலை பாராட்டி ஏ.ஐ.பி.எஸ்., நேர்மையான வீரர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார். இதனை பெறும் உலகின் முதல் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை பெற்றார். இது குறித்து ஏ.ஐ.பி.எஸ்., பொதுச் செயலர் ரோசலின் மோரிஸ் கூறுகையில், நேர்மையான வீரர் விருதை முதல் முறையாக கிரிக்கெட் வீரருக்கு வழங்குகிறோம். விருது வழங்கும் விழா வரும் ஜனவரி 13ஆம் திகதி ஆஸ்திரியாவில் நடக்க உள்ளது. தற்போது டெஸ்ட் தொடரில் விளையாடி வருவதால், இதில் டோனி கலந்துகொள்ள முடியாது. எனவே, இவருக்கு நினைவுப் பரிசை மட்டும் வழங்கியுள்ளோம். விருதுக்கான கிண்ணம் வரும் ஏப்ரல், 4ஆம் திகதி ஐ.பி.எல்., தொடரின் தொடக்க விழாவில் வழங்கப்படும் என்றார்.

## இந்தியாவிற்கு எதிரான தொடர் முழுமையாக அவுஸ்ரேலியா வசம்

(சிட்னி)



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை அவுஸ்ரேலிய அணி முழுமையாகக் கைபற்றிக் கொள்ளும் என்று அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கிளென் மெக்ரா தெரிவித்துள்ளார்.

மெல்பேர்ன் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் இந்தியாவைச் சுருட்டியவர் ஹில்'. பென் ஹாஸ் இரண்டாவது இனிங்கில் புகுந்தவர் மீண்டும் பீற்றர் சிடில். ஜேம்ஸ் பட்டின்சன் இந்திய வீரர்களுக்குள் ஊடுருவதைப் பார்க்கும் போது நான் அசந்துபோனேன்.

பட்டின்சன் இடையிடையே ஒரு சில நல்ல ஓவர்களை வீசுகிறார். மற்றப் படி அவர் விக்கெட் வீழ்த்துவார் என்ற எதிர்பார்ப்பினால் ஏதோ அபாயகரமான பந்து வீச்சாளர் போல் தெரிகிறார். ஆனால் அவர் உண்மையில் வேக ஆட்டங்களங்களில் அபாய வீச்சாளர் என்பதில் சந்தேகமில்லை.

எனவே, வேகப் பந்து வீச்சாளர்களின் சிறப்பான செயற்பாடுகள் தொடரும் பட்சத்தில் இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை முழுமையாக வெல்ல முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வேலணையில் மரதன் ஓட்டப்போட்டி



(தீவகம்)

விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட விளையாட்டு சம்மேளனம் நேற்று வேலணையில் நடத்திய மரதன்ஓட்டப் போட்டி சிறப்பாக நடைபெற்றது.

07 கிலோமீற்றர் தூரம் கொண்ட போட்டி பெண்களுக்காகவும், 12 கிலோமீற்றர் தூரம் கொண்ட போட்டி ஆண்களுக்காகவும் நடத்தப்பட்டது. வேலணை பிரதேச செயலக விளையாட்டுத்துறை மேம்பாட்டு உத்தியோகத்தரின் மேற்பார்வையில் நடைபெற்றன.

இந் நிகழ்வில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்தவரும், இரண்டாம் இடத்தை சங்கானைப் பகுதியைச் சேர்ந்தவரும், மூன்றாம் இடத்தை நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்தவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை கோப்பாய் பகுதியைச் சேர்ந்தவரும் இரண்டாம் இடத்தை பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரும், மூன்றாம் இடத்தை உடுவில் பகுதியைச் சேர்ந்தவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் 10 ஆம் இடம்வரை வெற்றியீட்டிய வீர, வீராங்கனை களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டது.

புள்ளிகளின் அடிப்படையில் வேலணை பிரதேச வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டனர். (85)

## வெற்றியுடன் ஆரம்பம்



(பிரிஸ்பேன்)

கடந்த செப்டம்பரில் அமெரிக்க பகிரங்க இறுதியில் தோல்வியுற்ற செரினா பிரிஸ்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் வென்று இந்த ஆண்டை வெற்றியுடன் தொடங்கியுள்ளார்.

தென்னாபிரிக்க வீராங்கனை சனேலி பைப்பர்ஸ் என்பவரை 6-2, 6-3 என்ற செட்களில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் செரினா.

இந்த ஆட்டத்தில் 7 சேவிஸ்களை அடித்து தனது உடற்தகுதியை உலகிற்கு அறிவித்துள்ளார் செரினா வில்லியம்ஸ்.

மற்றுமொரு ஆட்டங்களில் சேர்பிய வீராங்கனை அனா இவானோவிச், ஒஸ்திரிய வீராங்கனை பாஸ் ஜெக் என்பவரை 6-3, 6-3 என்ற செட்களில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

# ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவது அவசியமாகும்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பரிந்துரைகளையும் அரசாங்கம் அமுல்படுத்த வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கோரியுள்ளார்.

இந்த அறிக்கையில் சில குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், நாட்டின் தனித்துவ அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையில் அறிக்கை அமைந்துள்ளது. யுத்தம் தொடர்பில் வெளியான முழுமையான அறிக்கையாக நல்லிணக்க ஆணைக குழு அறிக்கையை கருத முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து ஐக்கிய இலங்கையை கடடியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.



ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கான ஓர் வழிகாட்டல் நூலாக நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை கருத முடியும்.

அத்துடன் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில தரப்பினர் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உயர்தர பெறுபேறு குளறுபடி ஆரம்பமானது விசாரணை

(கொழும்பு)

க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகளின் மாவட்ட மட்ட தர நிலைப்படுத்தலின் குளறுபடி தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனதிபதியினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு நேற்றுமுன்தினம் தனது விசாரணைகளை ஆரம்பித்தது.

முதலாவதாக பரீட்சைகள் ஆணையாளராக இருந்த அனுர எதிரிசிங்கவை விசாரணைக்குழு விசாரணைக்கு அழைத்திருந்தது.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சில் குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர். விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் செயலர் தாரா விஜேதிலக்கவின் தலைமையில் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கணினி புள்ளிவிபரவியல் வலையமைப்பு உருவாக்கம்

(கொழும்பு)

இலங்கையின் சகல பிரஜைகளினதும் ரகசிய தகவல்களும் உள்ளடங்கிய கணினி `புள்ளிவிபர வலையமைப்பு ஒன்றை உருவாக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்தத் திட்டம் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு முழுமைப் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டில் ஆயிரத்து 250 மில்லியன் ரூபா நிதி வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2013 ஆம், 2014 ஆம் ஆண்டுகளுக்காக 13 ஆயிரத்து 750 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட உள்ளது.

இதனடிப்படையில் சகலருக்கும் இலத்திரனியல் அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளதுடன், இந்த அடையாள அட்டை வெளியிடப்பட்ட பின்னர், தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் அடையாள அட்டைகள் பாவனையில் இருந்து நீக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

# அறிக்கை குறித்து ஆளும் கட்சிக்குள் முரண்பாடு நிலவுவது ஆரோக்கியமல்ல

## சுட்டிக்காட்டுகின்றது லக்பிம



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சிக்குள் நிலவி வரும் முரண்பாடுகள் ஆரோக்கியமான தல்ல என லக்பிம பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ கட்சிகள் இந்த அறிக்கைக்கு பூரண ஆதரவளித்து வரும் அதேவேளை, தேசியவாத கட்சிகளாக அடையாளப் படுத்திக் கொள்ளும் ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி என்பன எதிர்ப்பைத் தெரிவித்து வருகி

தருஸ்மன் அறிக்கை

4 காணொளி என பல வழிகளில் சர்வதேச சமூகம் அரசாங்கத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வரும் சந்தர்ப்பத்தில், அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

குறிப்பாக, புலம்பெயர் தமிழ் மக்களின் ஆதரவுடன் இலங்கைக்கு எதிராக சில சர்வதேச சக்திகள் மோசமான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

இவ்வாறான தொரு நிலையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்பை வெளியிடுவது ஆபத்தானது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை மாநாட்டின் அமர்வுகளில் இலங்கை விடயங்கள் விவாதிக்கப்பட உள்ளதாகவும் இதன் போது, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மேலும் அரசாங்கம் பதிலளிப்பதற்காக பயன்படுத்திக்கொள்ள முடியும் எனவும் அந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# விசாரணைகள் முடிவடைந்த பின்னரே இந்திய மீனவர்கள் சொந்த இடம் செல்வர்

(கொழும்பு)

கடற்படையினரால் கடந்த இருவார காலப் பகுதிக்குள் மீட்கப்பட்டிருக்கும் 35 இந்திய மீனவர்களதும் வழக்கு விசாரணைகள் முடிவடைந்ததும் முறையே அவர்கள் தமது சொந்த நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவரென கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

மீன்பிடித்தலுக்கான புயிற்சியின்போது படகுகள் சேதமாகிய நிலையில் உயிருக்குப் போராடி தத்தளித்த 29 இந்திய மீனவர்களையும் தானே சூறாவளி காரணமாக இலங்கை கடல எல்லைக்குள் கரை யொதுங்கியிருந்த ஆறு இந்திய மீனவர்களையும் கடற்படையினர் பாதுகாப்பாக மீட்டு அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருத்துவ வசதிகளை முன்னெடுத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கடற்படையினரால் மீட்கப்பட்ட 35 இந்திய மீனவர்களும் மேலதிக விசாரணை களுக்காக அவர்கள் மீட்கப்பட்டுள்ள கடல் பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது வழக்கு விசாரணைகள் முடிவடைந்ததும் இம் மீனவர்கள் முறையே அவர்களது சொந்த நாட்டிடம் ஒப்படைக்கப்படுவரெனவும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

அதேவேளை, தானே சூறாவளி காரணமாக காணாமற்போன 21 இந்திய மீனவர்களை தேடிக் கண்டுபிடித்து தருமாறு இந்திய அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இதுவரை ஆறு மீனவர்கள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்களையும் உயிருடன் மீட்கலாமென்ற நம்பிக்கையில் வடக்கு, கிழக்கு, வடமத்திய கடற்படை முகாம்களைச் சேர்ந்த கடற்படையினர் வடக்கு, கிழக்கு கடற்பரப்பில் தொடர்ந்தும் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொள்கைகளை விமர்சனம் செய்யாதீர்

(கொழும்பு)

அரச ஊழியர்கள் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சனம் செய்ய முடியாது என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார். பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பொது மக்களின் பணத்தில் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் அரச ஊழியர்கள் அரசாங் கத்தை விமர்சனம் செய்யக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். அரச ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் பொதுமக்களுக்கு சேவையாற்ற வேண்டு மென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காணிகளை இழந்த மக்களின் தகவலைத் திரட்ட ஆய்வு மையம்



(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் காணிகளை இழந்த மக் கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கு ஆய்வு மைய மொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக இந்தத் தகவல்கள் திரட்டப்படவுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

இதன் ஊடாக காணிகளை இழந்த அனைவருக்கும் அரசாங்கத் தின் ஊடாக காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தனியார் காணிகளுக்கும், காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் கூறினார். இரண்டு வருடங்களுக்குள் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள காணிகளுக்கு சட்டபூர்வமாக உறுதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ரூபாவின் பெறுமதி குறையாது மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கை ரூபாவின் மதிப்பு மேலும் குறைக்கப்படமாட்டாதென மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கொடுப்பனவு மீதிப் பிரச்சினையை காரணம் காட்டி இவ்வாறான ஒரு சந்தேகம் பணச்சந்தையில் நிலவுகிறது. எனினும் இந்த வருடத்தில் ரூபாவின் மதிப்பை குறைக்கும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டாது என ஆளுநர் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மூன்று ரூபா வீதம் பெறுமதி குறைப்பு அறிவிக்கப்பட்டது.

இது ஏற்றுமதியை ஊக்குவிக்கும் முகமாக மேற்கொள்ளப் படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக, இலங்கையின் பணவீக்கம் கடந்த டிசம்பரில் நிலையானதாக இருந்ததாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# அரசியலில் இளைஞரின் செயற்பாடு ஒடுக்குவதற்கு அரசாங்கம் முயற்சி

## குற்றஞ்சாட்டுகிறார் சஜித்



(கொழும்பு)

அரசியலில் இளையோரின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலகள் தொடர்பில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய சட்ட மூலத்தில், இளைஞர் பிரதி நிதித்துவத்தை ஒடுக்கும் முனைப்புக்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போதைய உள்ளூராட்சி மன்றத்தேர்தல் சட்டத்தில், இளைஞர்கள் மற்றும் மகளிருக்கு 40 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், புதிதாக அறிமுகப் படுத்தப்படவுள்ள சட்டத்தில் மகளிர் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் 25 வீதமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

மகளிருக்கு 12.5 வீதமும், இளைஞர் யுவதிகளுக்கு 12.5 வீதமும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இளம் சமூகத்தின் பங்களிப்பு அதிகமாக தேவைப்படும் கால கட்டத்தில் அரசாங்கம் இவ்வாறான ஓர் நடவடிக்கை எடுத்துள்ளமை பெரும் அதிருப்தி அளிக்கிறது.

18 - 35 வயது வரையிலான இளைஞர் யுவதிகளுக்கும், மகளிருக்கும் தலா 25 வீத இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் நாடாளுமன்றில் குரல கொடுக்கப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.


தரப்பட்ட படத்திற்கு மிகப் பொருத்தமான சொற்கூட்டத்தைத் தெரிக.

72. 



| | | | |
|---|---|---|---|
| 1) | துடுப்பாட்டம், | பார்வையாளர், | பந்து |
| 2) | விளையாட்டு, | பந்து, | பார்வையாளர் |
| 3) | துடுப்பாட்டம், | நடுவர், | பந்து வீச்சாளர் |

73. 

| | | | |
|---|---|---|---|
| 1) | விலங்கு, | மரம், | பலம் |
| 2) | மூலிகை, | மரம், | நிழல் |
| 3) | மரம், | எரிபொருள், | காற்று |

74. 

| | | | |
|---|---|---|---|
| 1) | அலங்காரம், | வெளிச்சம், | பௌத்தம் |
| 2) | வானம், | பௌத்தம், | வெளிச்சம் |
| 3) | காகிதம், | நூல், | காற்று |

75. 


| | | | |
|---|---|---|---|
| 1) | கூரை, | மாணவர், | சுவர் |
| 2) | கல்வி, | நீர், | சுவர் |
| 3) | அறிவு, | மாணவர், | ஆசிரியர் |

**பின்வரும் பழமொழியைப் பூரணப்படுத்துக.**

76. வேலியே ..........................................................மேய்ந்தது போல.
77. மரத்தில் இருந்து ..........................................................மாடேறி மிதித்தது போல.
78. கறையான் புற்றில் ..........................................................புகுந்தது போல.
79. கீரியும் ..........................................................போல.
80. நகமும் ..........................................................போல.
81. உள்ளங்கை ..........................................................போல.

**பொருத்தமான விடையைத் தெரிந்து கோடிடுக.**

82. வெள்ளம் காரணமாக உடனே ஏற்படக்கூடிய நிகழ்வு
   1) தொற்று நோய்கள்   2) கட்டடங்களுக்கும், மனிதர்களுக்கும், விலங்குளுக்கும் பாதிப்பு ஏற்படும்
   3) மண் வளம் கூடும்

83. கட்டாக்காலி நாய்களின் அதிகரிப்பால் ஏற்படும் பாதிப்பு.
   1) விசர் நாய்க்கடியால் ஏற்படும் நோய்   2) சிறந்த நாய்க் குட்டிகள் கிடைக்கும்
   3) கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை கூடும்

**சீதா, பானு, ரஞ்சன், குமார் மாம்பழத்தை விரும்புவர். வருணி, ரஞ்சன், நீலா, குமார் அப்பிளை விரும்புவர். ரஞ்சன், பானு அன்னாசிப் பழத்தை விரும்புவர். இதன்படி**

84. மாம்பழத்தையும் மட்டும் விரும்புவர் யார்?..........................................................
85. அப்பிளையும், அன்னாசியையும் மட்டும் விரும்புவர் யார்?..........................................................
86. பானு எப்பழங்களை விரும்புகிறான்?..........................................................
87. மூன்று பழவகைகளையும் விரும்புபவர் யார்?..........................................................





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி 15 நிமி


# கல்வி முரசு

வெளியீடு 11



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**தலைப்புக்கேற்ற படத்தைத் தெரிந்து இலக்கத்தை அட்டவணையில் குறிக்க.**

01. 

(1) (2) (3) (4) (5) (6)

(7) (8) (9) (10) (11) (12)

| தரைப்போக்கு வரத்துச் சாதனம் | தொடர்பு சாதனம் | விமானப்போக்கு வரத்துச் சாதனம் | துணி உற்பத்தி பொருட்கள் | கடல்போக்கு வரத்துச் சாதனம் | தளபாட உற்பத்திப் பொருட்கள் |
|---|---|---|---|---|---|
| 1) .................... | 3) ............ | 5)...................... | 7)...................... | 9)...................... | 11)...................... |
| 2) .................... | 4) ............ | 6)...................... | 8)...................... | 10)...................... | 12)...................... |

**பிரசினங்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.**


13. பி.ப. 2.15 இற்குப் பயணத்தை ஆரம்பித்த தில்சான் மீண்டும் வீட்டுக்கு பி.ப. 5.10 இற்கு வந்தான். அவனது பயணத்திற்கு செலவிட்ட காலத்தைக் காண்க.

..........................................................................................................

14. தொழுவத்தில் இருந்த 14 மாடுகளினதும், 6 ஆடுகளினதும் கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................................................

**பாடலை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்க.**



கொழும்பு நகரம் பெரிய நகரம் - கோல அழகு கொண்ட நகரம்
மாடி மனைகள் நிறைந்த நகரம் - மக்கள் பலரும் விரும்பும் நகரம்
காலிமுகக் கடற்கரையும் - கவின் மிகு பல கட்டடங்களும்
தூர நின்று நாம் பார்த்திடவே - துலங்கும் பெரிய துறைமுகமும்
விரிந்த பரந்த வீதிகளும் எழில் - விளங்கும் கோயில் பள்ளி பலவும்
நிறைந்த நகரம் கொழும்பு நகரம் நிகரில்லாத பெரிய நகரம்
இந்து சமுத்திர ஓரத்திலே - மிக இனிதாய் அமைந்த ஒரு நகரம்
வந்து பலரும் பார்த்திடவே - வாஞ்சை கொள்ளும் பெரு நகரம்

15. இப்பாடல் எதைப் பற்றிக் கூறுகின்றது?........................................

16. இப்பாடலில் வரும் கடற்கரையின் பெயர் என்ன?........................................

17. இப்பாடலில் வரும் சமுத்திரத்தின் பெயர் என்ன?........................................

**பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க் கருத்துச் சொற்கள் தருக.**

18. பெரிய ........................................ 19. நகரம் ........................................

20. தூர ........................................ 21. பரந்த ........................................

**பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.**

22. அழகு ........................................ 23. முகம் ........................................

24. வீதி ........................................ 25. வாஞ்சை ........................................

26. கோயில் ........................................ 27. பெரிய ........................................

28. கொழும்பு நகரம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது? ........................................

29. இப்பாடலில் வரும் பெயர்ச் சொற்கள் மூன்று எழுதுக.

1) ........................ 2) ........................ 3) ........................

30. இலங்கைக்கு மிக அருகில் அமைந்துள்ள நாட்டின் பெயர் தருக........................................

**நாடக நிகழ்வுக்காக விற்கப்பட்ட நுழைவுச் சீட்டு தொடர்பான விபரம் தரப்பட்டுள்ளது. அதைக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.**

| வகுப்பு | நுழைவுச் சீட்டு விலை |
|---|---|
| விசேட வகுப்பு | ரூ. 200.00 |
| முதலாம் வகுப்பு | ரூ. 100.00 |
| இரண்டாம் வகுப்பு | ரூ. 50.00 |
| மூன்றாம் வகுப்பு | ரூ. 30.00 |

31. விசேட வகுப்புச் சீட்டுகள் 150 விற்றிருப்பின் கிடைத்த இலாபம் எவ்வளவு?

........................................

32. முதலாம் வகுப்புச் சீட்டுகள் 100 விற்றிருப்பின் கிடைத்த இலாபம் எவ்வளவு?

........................................

33. 2 ஆம் வகுப்புச் சீட்டுகள் 200 விற்றிருப்பின் கிடைத்த பணம் எவ்வளவு?

........................................

34. 3 ஆம் வகுப்புச் சீட்டுகள் விற்றுக் கிடைத்த மொத்தத் தொகை ரூ.9000.00 எனில், விற்ற சீட்டுக்களின் எண்ணிக்கையைக் காண்க.

........................................


35. சீட்டுக்கள் விற்றுக் கிடைத்த மொத்தப் பணத்தைக் காண்க.

........................................

36. மொத்தமாக விற்ற சீட்டுக்களின் எண்ணிக்கை யாது?

........................................

**தரம் 4 வகுப்பில் உள்ள மாணவர்கள் விரும்பும் காலை உணவின் விபரம் வரைபில் கீழே காட்டப்பட்டுள்ளன. அதனை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**




37. மிகக் கூடுதலானோர் விரும்பும் உணவு வகை யாது?

........................................

38. மிகக் குறைந்தளவானோர் விரும்பும் உணவு வகை யாது?

........................................

39. அதிகமானோர் விரும்பும் உணவுக்கும் மிகக் குறைந்தளவானோர் உண்ட உணவுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

........................................



40. இடியப்பம் உண்ட மாணவர்கள் எத்தனை பேர்?

........................................

41. எத்தனை மாணவர்கள் இட்லியை சாப்பிட்டிருக்கின்றனர்?

........................................

42. ஒரு தென்னந்தோட்டத்தில் 1860 தேங்காய்கள் பறிக்கப்பட்டன. அவற்றை 3 லொறிகளில் ஒரே அளவில் ஏற்றப்பட்டன. ஒரு லொறியில் ஏற்றப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

........................................

**தரப்பட்ட சிங்கள வசனங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

43. ஸ்துதிய ........................................ 44. ஆயுபோவன் ........................................

**தரப்பட்ட சொல்லுக்கான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

45. ஆசிரியர் ........................................ 46. சாரதி ........................................

47. விவசாயி ........................................ 48. தாதி ........................................

49. தபாற்காரன் ........................................ 50. வைத்தியர் ........................................

**தரப்பட்ட சொற்களைக் கொண்டு இடைவெளிகளை பூரணப்படுத்துக.**

**(காசோலை, பூக்கள், வாகனப்புகை, காலநிலை, அணில், சுத்தமான, நன்னீரில், மண்புழு, வெட்டுக்கிளி)**

51. சூழல் ........................................காரணமாகவும் மாசடைகின்றது.

52. எமது தொழிலைப் பாதிப்பதில் வானிலையும், ........................................யும் காரணமாகின்றன.

53. கொடுக்கல், வாங்கலில் ........................................பயன்படுத்தப்படுகின்றது.

54. ........................................விவசாயியின் நண்பன் என அழைக்கப்படுகின்றது.

55. மீன்கள் ........................................மூலம் சுவாசிக்கின்றன.

56. ........................................முட்டையிட்டு இனம் பெருகாத ஒரு பிராணியாகும்.

57. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு ........................................நீரிலேயே முட்டையிடும்.

58. விரால் மீன் ........................................வாழும் மீனினமாகும்.

**பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுக.**

59. கூ.மொ.வி.நி ........................................ 60. இ.போ.ச ........................................

61. கி.பி. ........................................ ,62. இ.மி.ச. ........................................

63. இ.ரூ.கூ. ........................................ 64. மு.ப. ........................................

**பகுதி A இல் சில அளவைகள் தரப்பட்டுள்ளன. பகுதி B இல் உள்ள பொருத்தமான நியம அலகைக் கோட்டினால் இணைக்க.**

| | A | B |
|---|---|---|
| 65. | கிலோமீற்றர் | g |
| 66. | லீற்றர் | Km |
| 67. | மீற்றர் | ml |
| 68. | சென்ரி மீற்றர் | m |
| 69. | கிராம் | cm |
| 70. | கிலோகிராம் | l |
| 71. | மில்லிலீற்றர் | kg |



# ஆணைக்குழு அறிக்கை என்னவாகப் போகிறது?

**ந**ல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்படுவதற்கு சரியாக ஒரு வருடத்திற்கு முன்னர் அதாவது 2009 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அப்போது இலங்கைக்கு வந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டு இருந்தார். போர் முடிந்து ஒரு வார காலத்திலேயே இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

சர்வதேச மனிதநேயம் மற்றும் மனித உரிமைகள் சட்டங்களை மீறியது தொடர்பாக பொறுப்புக் கூறுதல் விடயமாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் வலியுறுத்தியதாகவும் அரசாங்கம் அது விடயத்தில் உரிய நட வடிக்கை எடுக்கும் என ஜனாதிபதி கூறியதாகவும் அவ்வறிக்கையின் இறுதியில் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் பொறுப்புக்கூறல் என்ற விடயம் வரும் போதெல்லாம் அரசாங்கம் இந்த ஆணைக்குழுவையே கூறி வந்தது. எனினும் கௌரவப் பிரச்சினையாக எடுத்துகொண்டோ என்னவோ ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடனான உடன்பாட்டின் அடிப்படையிலேயே நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கபட்டது என்று கூற அரசாங்கம் விரும்பவில்லை.

இறுதியில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் 388 பக்கங்களை கொண்ட அறிக்கையை முழுமையாக வாசிக்காமல் அறிக்கை வெளியிட்ட நாளே சிலர் தாம் முன்கூட்டியே மனதில் வைத்திருந்த கருத்துக்களை வெளியிட்டமையை காணக்கூடியதாக இருந்தது.

சிலர் போரின் இறுதி நாட்களில் மூன்று முக்கிய புலித்தலைவர்கள் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தபோது படையினரால் சுட்டு கொல்லப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக ஆணைக்குழு "தீர்ப்பு" வழங்கும் என்று எதிர்பார்தது இருந்தனர் போலும். அவ்வாறான தீர்ப்பொன்று அறிக்கையில் இல்லாததால் அவர்கள் அறிக்கையை முற்றாக நிராகரிக்க முற்பட்டு இருப்பதையும் காணலாம்.

ஆனால் சரணடைந்த வேறு சில புலித் தலைவர்களை படையினர் அழைத்து சென்று பின் அவர்களை காணவில்லை என்று கூறப்படுவது தொடர்பாக விசாரணை செய்யவேண்டும் என்று ஆணைக்குழு கூறியிருப்பதை அவர்கள் கண்டு கொள்ளவில்லை போலும்.

"அரச வர்ணம்" ஆங்காங்கே காணப்பட்டாலும் ஆணைக்குழுவின் அறிக்கை இனப்பிரச்சினை தொடர்பான நல்லதோர் ஆராய்ச்சி ஆவணம் என்பதில் சநதேகமில்லை. அதேவேளை, அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுவதைப் போல், ஆணைக்குழு அப்பாற் சென்று அதிகார பரவலாக்கலை வற்புறுத்தியுள்ளது. ஆணைக்குழுவின் ஆணையை பொறுத்தவரை, நல்லிணக்கம் என்று வரும்போது அதற்கான ஒரே வழி அதிகார பரவலாக்கல்தான் என்று எடுத்துக கொள்ள முடியாது. ஆயினும் ஆணைக்குழு அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்தியுள்ளது.

எனவே பாத்திரத்தில் அழுக்கு நீர் இருந்தாலும் அந்நீருடன் குழந்தையையும் கொட்டி விடுவதா என்று அதிகாரப் பரவலாக்கலை ஆதரிப்போர் சிந்திக்க வேண்டி யுள்ளது.

அரசாங்கம் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை செயற்படுத்துமா என்பது அடுத்த கேள்வியாக உள்ளது. எல்லா சிபாரிசுகளையும் செயற்படுத்த வேண்டும் என்றில்லை என அமைச்சர் மஹிந்த சமரசிங்க சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

அவ்வாறாயின் அரசாங்கம் எந்தெந்த சிபாரிசுகளை நிறைவேற்றப் போகிறது எந்தெந்தவற்றை கைவிடப் போகிறது எனபது இப்போதைய கேள்வியாகும்.



ஜனாதிபதி ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட இரணடு நிபுணர் குழுக்கள் நீண்ட நாள் ஆய்வுக்குப் பின் அதிகாரப் பரவலாக்கலே இனப் பிரச்சினைக்கு தீர்வாகும் என முடிவு செய்துள்ளன.

ஒன்று, ஜனாதிபதியின் முதலாவது பதவிக் காலத்தில் நியமிக்கப்பட்ட சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவாகும் (ஏ.பி.ஆர்.சி.) மற்றையது தற்போதைய நல்லிணக்க ஆணைக்குழுவாகும் . (எல்.எல்.ஆர்.சி.)

முதலாவது குழு கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு சற்று முன்னர் அதன் அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தது. அவ்வளவுதான். அக்குழுவின் தலைவராகவிருந்த தற்போதைய சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண இப்போது அதைப் பற்றி பேசுவதில்லை.

அதை நினைக்கும் போது அதிகார பரவலாக் கலைப் பற்றி நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசு கள் எந்தளவிற்கு அரசாங்கத்தின் ரசனையோடு ஒத்துப் போகும் என்பது கேள்விக் குறியாக உள்ளது. ஒத்துப் போனால் நல்லது.


*எஸ்.எம்.எஸ்.ஐயூப் கட்டுரையிலிருந்து*

## இலட்சிய நடிகை



**த**னது சிறப்பான நடிப்பாற்றலால் ஏராளமான ரசிகர்களைக் கவர்ந்த நந்திதாதாஸ், வழக்கமான கதையம்சம் உள்ள படங்களில் எப்போதும் நடிப்பதில்லை என்ற கொள்கையுடையவர். தமிழில் கன்னத்தில் முத்தமிட்டால், அழகி ஆகிய படங்களில் நடித்திருக் கிறார்.

பாலிவுட் தயாரிப்பாளரும் இயக்குநருமான ஃபர்கான் அக்தர், ஒரு கதையுடன் நந்திதா தாஸை அணுகியிருக்கிறார். கதையைக் கேட்ட நந்திதா "இது போன்ற பொழுது போக்குக் கதையில் நடிக்க விருப்பமில்லை. மக்கள் பிரச்சினையை மையமாகக் கொணட கதையாக இருந்தால் மட்டும் சொல்லுங்கள் சம்பளம் ஒரு பொருட்டல்ல" என்று கூறியிருக்கிறார்.



# சீனாவின் வியத்தகு வளர்ச்சி

**வ**ளர்ந்த நாடுகள் என்ற பட்டியலில் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளும், ஆசியாவில் ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளும் இடம் பெற்றுள்ளன. தற்போது இந் நாடுகளுக்குச் சமமாக சீனா விரைவான வளர்ச்சியைக் கண்டு வருகிறது. இதை அறுதியிட்டுக் கூறுவதற்குப் பல சான்றுகள் உள்ளன.

பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் முதல் மூன்று இடங்களை முறையே அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளும் வகிதது வந்தன. 2005 இல் சீனா, ஜெர்மனியை பின்னுக்குத் தள்ளி மூன்றாம் இடத்தைப் பிடித்தது. பின்னர் மேலும் முன் னேற்றம் கண்டு 2010 இல் ஜப்பானையும் பின்னுக்குத் தள்ளி, இரண்டாம் இடத்துக்கு சீனா முன்னேறியுள்ளது.

இன்னும் சொல்லப்போனால், பொருளாதார நிபுணர்களின் ஆய்வின்படி 2040-2050 காலகட்டத்தில் உலகத்தில் முதலிடத்தை சீனா பிடித்து விடும். அந்த அளவுக்கு பல துறைகளில் அதன் வளர்ச்சி அமைந்திருக்கிறது. சீன நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பு 6 ட்ரில்லியன டொலர் என்று கூறப்படுகிறது. அதாவது, 6 லட்சம் கோடி டொலர்.

ஒரு நாடு எவ்வளவு வளமாக உள்ளது என்பதற்கு அளவு கோலாக, அந்த நாட்டிடம் அன்னியச் செலாவணி கையிருப்பு எவ்வளவு உள்ளது என்பதைப் பார்ப்பார்கள். பல ஆண்டுகளாக அன்னியச் செலா வணி கையிருப்பில் ஜப்பான் முதலிடத்தில் இருந்து வருகிறது. ஜப்பானிடம் உள்ள அந்நியச் செலாவணி கையிருப்பு, 700 முதல் 800 மில்லியன் டொலர் என்று மதிப்பிடப்படுகிறது.

சீனா கடந்த 30 ஆண்டுகளாக மேற்கொண்ட நடவடிக்கைகளால், அந்நாட்டில் உற்பத்தி பெருகியதாலும், ஏற்றுமதி அதிகரித்ததாலும், சீனா தற்போது, ஜப்பானை விட 3 மடங்கு அதிகமாக, அதாவது 2500 பில்லியன் டொலர் அளவுககு அன்னியச் செலாவணியைக் கையிருப்பு வைத்துள்ளது.

தனிநபர் வருமானம் 11 மடங்கு அதி கரித்துள்ளது. சன அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருந்த 40 கோடி மக்களை, அந்நிலையில் இருந்து மீட்டு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி யுள்ளது. இதற்குக் காரணம், விவசாயம், கல்வி, உள்கட்டமைப்பு பெருக்கம், தொழில் உற்பத்தி முதலான முக்கிய துறைகளில் அரசு தீவிரமாகக் கவனம் செலுத்தி வந்ததுதான்.

உதாரணமாக, உட்கட்டமைப்பு வசதியை அதிகரிப்பதற்காக மட்டும் அதாவது சாலைகள் மற்றும் பாலங்கள், அணைகள், விமான நிலையங்கள் கட்டுவது ஆகிய பணிகளுக்காக மட்டும் ஒருநாளைக்கு 5000 கோடி ரூபாவை சீன அரசு செலவிடுகிறது.

விவசாய உற்பத்தியை அதிகரிக்க, பல்வேறு பெரிய அணைகளைச் சீனா கட்டியுள்ளது. உலக அளவில் 50 ஆயிரம் பெரிய அணைகள் உள்ளன என்று ஒரு கணக்கு கூறுகிறது. அவற்றுள் 25 ஆயிரம் அணைகள் சீனாவில் அமைந்துள்ளன. இவை தவிர, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 85 ஆயிரம் அணைகள் அங்கு கட்டப்பட்டுள்ளன. தண்ணீரை அவர்கள் துளியும் வீணாக்குவதில்லை. நீர் மூலம் உற்பத்தி செய்யப்படும் புனல் மின்சார நிலையங்களும் சீனாவில்தான் அதிகம்.

ஒவ்வொரு வருடமும் 1 லட்சம் மெகா வாட் மின்சாரத்தை கூடுதலாக உற்பத்தி செய்யுமளவு சீனாவிடம் கட்டமைப்பு வசதியும், அதற்கான சக்தியும் உள்ளது என்பது மலைப்புக்குரியது. அங்கு மின் சாரப் பற்றாக்குறை என்ற பேச்சே இல்லை.

சீனா எப்படி வளர்ச்சி கண்டிருக்கிறது என்பதற்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக, மூலப் பொருட்கள் பயன்பாடடு அளவைப் பார்க்கலாம்.

உலக அளவில் உற்பத்தியாகும் சிமெந்தில் பாதியை சீனா பயன் படுத்துகிறது. இரும்பு மற்றும் உருக்கு ஆகிய வற்றை எடுத்துக் கொண்டால், உலகின் மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒரு பகுதியையும், அலுமினியத்தைப் பொறுத்த வரையில் மொத்த உற்பத்தியில் நான்கில் ஒரு பகுதியையும் சீனா பயன்படுத்துகிறது.

சீனாவில் உள்ள ஒரு மாகாணத்தின் பெயர் குவாணடான். இங்குதான் எலெக்ட் ரோனிக் பொருட்கள் முதல் தளபாடங்கள் வரை மிக அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டு, உலகின் பல பகுதிகளுக்கு விநி யோகம் செய்யப்படுகிறது.

இவ்வாறு உபகரணங்களை ஏற்றுமதி செய்வதில் ஜெர்மனி முதலிடத்தில் இருந்தது. தற்போது அந்த இடத்தையும் சீனா பிடித்து விட்டது. உலகம் முழுவதும் நடைபெற்று வரும் வர்த்தகத்தில் 31 சதவிகிதம் சீனாவில் தயாரானவை என்ற நிலை உருவாகியுள்ளது.


உலகிலேயே கார்களை அதிகமாக வாங்குவது அமெரிக்கா. வைரத்தை அதிகமாக வாங்குவது ஜப்பான். தங்கம் அதிகமாக வாங்குவது இந்தியா. இப்போது இந்த மூன்றையும் வாங்குவதில் மற்றவர்களை விட சீனர்கள் மிஞ்சி வருகிறார்கள் எனபதிலிருந்து, அங்கு ஏற்பட்டுள்ள பொரு ளாதார வளர்ச்சியை உணரலாம்.

உற்பத்தித் துறையில் மட்டுமின்றி, தொழில் நுட்ப மற்றும் விஞ்ஞான வளர்ச்சியிலும் தங்கள் நாடு முன்னேற்றம் காண வேண்டும் என்பதில் சீன அரசு தனி அக்கறை எடுத்துக் கொண்டு செயற்பட்டு வருகிறது. இதற்கு ஒரு உதாரணமாக, உலகிலேயே அதிவேக ரயில் சீனாவில் தான் இயங்கி வருகிறது என்பதைச் சொல்லலாம்.

சீனாவின் இரு நகரங்களுக்கு இடை யிலான 1120 கிலோ மீட்டர் தூரத்தை அந்த அதிவேக ரயில் 5 மணி நேரத்தில் கடக்கிறது. இதேயளவு தூரத்தை கடக்க அமெரிக்காவில் ஓடும் ரயில் 18 மணிநேரத்தை எடுத்துக் கொள்கிறது என்பதிலிருந்து, சீன தொழில் நுட்ப வளர்ச்சியைப் புரிந்து கொள்ளலாம்.

*துக்ளக்கில் ஜி.விஸ்வநாதன் கட்டுரையிலிருந்து*

# முல்லைப் பெரியாறு அணைக்கு நிலநடுக்கத்தால் பாதிப்பில்லை



## நிபுணர்குழு தெரிவிப்பு

(டில்லி)

முல்லைப் பெரியாறு அணைக்கு நிலநடுக்கத்தால் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என நிபுணர் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில் ஐந்து பேர் கொண்ட உயர்மட்டக் குழுவை உச்சநீதிமன்றம் அமைத்தது. அந்தக்குழு பல்வேறு நிபுணர்களின் ஆய்வறிக்கைகள் மற்றும் நேரடி ஆய்வு முடிவுகளை வைத்து விசாரித்து வருகிறது.

முல்லைப் பெரியாறு அணை நிலநடுக்கத்தால் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக கேரள அரசு புகார் கூறியதைத் தொடர்ந்து அண்மையில் தத்தே, மேத்தா நிபுணர்களைக் கொண்ட குழுவை இந்த ஐவர் குழு அணைக்கு நேரடியாக அனுப்பி ஆய்வு செய்தது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் ஐவர் குழு கூடியது. அப்போது குழு உறுப்பினர்களுடன் தமிழக, கேரள சட்டத்தரணிகளும் ஆஜராகினர். அப்போது தத்தே, மேத்தா நிபுணர் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையில் தாங்கள் அண்மையில் அணைக்கு நேரில் சென்று ஆய்வு நடத்தியது குறித்த விபரங்களையும், முடிவுகளையும் இரு நிபுணர்களும் தெரிவித்தனர். அதில், முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் நிலநடுக்கம் மிக மிகச் சிறிய அளவிலேயே ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதால், அணைக்கு நிலநடுக்கத்தால் எந்தப் பாதிப்பும் ஏற்படவாய்ப்பில்லை என்று கூறியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# தமிழக மீனவர் பிரச்சினைக்கு புத்தாண்டில் கிடைக்கும் தீர்வு



(சென்னை)

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு இந்தப் புத்தாண்டில் நல்ல தீர்வுகிடைக்கும் என காங்கிரஸ் கட்சியின் தமிழகப் பிரிவுத் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழக-இலங்கை மீனவர்கள் 2 முறை சந்தித்துப் பேசி உள்ளனர். பிரதமரிடமும் மீனவர் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. வழிதவறிச் செல்லும் மீனவர்கள் இலங்கையில் சிறைப் பிடிக்கப்படும்போது உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண தனி அதிகாரி நியமிக்க வேண்டும் என்று கேட்டுள்ளேன். எனது யோசனையை வெளியுறவுத்துறை செயலாளர் வரவேற்றுள்ளார்.

மீனவர் தரப்பில் கச்சதீவை மீட்க வேண்டும். அதுவரை குத்தகைக்கு எடுக்கவேண்டும் என்று மீனவர்கள் கருத்தையும், பிரதமரிடம் தெரிவித்துள்ளேன். சிறைப் பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்கும்படி இலங்கைத் தூதரகத்திடமும், மத்திய அரசிடமும் பேசியுள்ளேன். விரைவில் நல்ல முடிவு கிடைக்கும் எனத் தெரிவித்தார்.


# காதலுக்கு புதுவிதமாகப் பரிசளிக்க ரயிலைக் கடத்த முயன்ற காதலன்

தன்னுடைய காதலிக்குப் புதுவிதமாகப் பரிசளிக்கத் துடித்த ஒருவிதமான காதலன் ஒரு எக்ஸ்பிரஸ் ரயிலையே கடத்த முயன்று சிறையில் தள்ளப்பட்டுள்ள சம்பவம் பிஹாரில் நடந்துள்ளது.

காதலிக்குப் புத்தாண்டுப் பரிசளிக்க, ரயிலைக் கடத்த முயன்று பல பயணிகளின் உயிருடன் விளையாடிய அந்த நபரின் பெயர் கேத்தன் குமார் (வயது -25) என்பதாகும்.

குமார் அமிர்தசரஸிலிருந்து வரும் அம்ராப்பள்ளி விரைவு வண்டியில் கத்திஹார் என்னுமிடத்தில் ஏறினார். ரயிலின் ஓட்டுநர் ஜனார்தன் பஸ்வான் என்பவரின் நெற்றிப்பொட்டில் கைத்துப்பாக்கியை வைத்து அழுத்தி ரயிலை நிறுத்துமாறு கூறியுள்ளான். ஓட்டுநர் மறுக்கவும், கைத்துப்பாக்கியின் பின்புறத்தால் ஓட்டுநரை அவர் தாக்கியிருக்கிறான். இதற் கிடையில் மற்ற பயணிகள் சேர்ந்து அந்த நபரை அடித்து வீழ்த்தி ரயில்வே பொலிஸிடம் ஒப்படைத்தனர்.

முகலாயப் பேரரசர் ஷாஜஹான் தனது காதல் நினைவாக தாஜ்மஹாலைப் பரிசளித்தார். நானோ என்காதலிக்கு இந்த ரயிலைப் பரிசளிக்க விரும்பினேன் என்று பிதற்றிய அந்தக் காதல்பித்தன் கடைசிவரை தனது காதலி பெயரைக் கூற மறுத்துவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. பயணிகளின் உயிருடன் விளையாடியதற்காக அந்த நவீன காதலன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.




# தேசியக் கொடியை அவமதித்தாராம் ஹசாரேக்கு எதிராக மனுத்தாக்கல்

(புதுடில்லி)




அன்னா ஹசாரே சென்னைக்கு வந்தவேளை சேத்துப் பட்டில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவரின் ஆதரவாளர்கள் இந்திய தேசியக் கொடியை முறைகேடாகப் பயன்படுத்தினர் எனத் தெரிவித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி என்.ஜோன செல்வராஜ், மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது,

கடந்த 18ஆம் திகதி அன்னா ஹசாரே சென்னை சேத்துப்பட்டில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டார். அந்தக் கூட்டத்தில் தேசியக்கொடி தவறாகப் பயன்படுத்தப்பட்டது. சிலர் அதை பெட்சீட்டாகவும், சிலர் அதை குளிருக்கான சால்வையாகவும் பயன்படுத்தினர். தேசியக்கொடி அவமதிக்கப்பட்டதை அடுத்து நான் மத்திய உள்துறை மற்றும் தமிழக உள்துறை செயலாளர்களுக்கு தந்தி மூலம் டிசம்பர் 19ஆம் திகதி புகார் கொடுத்தேன். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

இதுவரை மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்காமல் மௌனமாகவே உள்ளன. எனவே அன்னா ஹசாரே மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மத்திய மற்றும் தமிழக உள்துறை செயலாளர்களுக்கு உத்தரவிட வேண்டுமென அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

# மே மாதத்தின் பின்னர் ரஜினி வாழ்வில் திருப்பம்



(சென்னை)

ரஜினி வாழ்வில் வரும் மே மாதம் 12ஆம் திகதிக்கு பின்னர் மாற்றம் ஏற்படும் என்று ஜோதிடர்கள் கணித்துள்ளனர். கடந்த 2011ஆம் ஆண்டு திரையுலகில் பல்வேறு திருப்பங்கள் ஏற்பட்டது.

இந்த ஆண்டு நட்சத்திரங்கள் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று ஜோதிடர்கள் கணித்திருக்கின்றனர். பொதுவாக பார்க்கும் போது நடிகர், நடிகைகளின் வாழ்க்கை மேம்பட்டிருக்கும்.

தமிழ் சினிமா உலகம் ஒரு புதிய பரிமாணத்தை அடையும் என்று தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டு ரஜினிக்கு இன்னல் தரும் ஆண்டாக அமைந்தது.

அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டது. இதனால் 'ராணா' படத்தின் படப்பிடிப்புப் பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு அவருக்கு எப்படி இருக்கும் என்று ஜோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ரஜினிக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். மே 12ஆம் திகதி அவரது வாழ்வில் புதிய மாற்றம் ஏற்படும். ஜூன் மாதத்துக்கு பிறகு அவரது புகழ் ஓங்கும் என்று கணித்திருக்கின்றனர்.

# பாக்.இராணுவத் தளபதி போல என்னையும் நடத்துகின்றனர்

## இந்திய இராணுவத் தளபதி குற்றச்சாட்டு

(புதுடில்லி)

பாகிஸ்தான் இராணுவத் தளபதி போல தன்னை நடத்துவதாக இந்திய இராணுவத் தளபதி தெரிவித்துள்ள குற்றச்சாட்டு இந்தியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


இந்திய இராணுவத்தின் தலைமைத்தளபதியாக இருப்பவர் ஜெனரல் வி.கே.சிங். இவரது பிறந்த திகதி குறித்து கடந்த மாதம் சர்ச்சை எழுந்தது. இராணுவ ஆவணங்களில் வி.கே. சிங்கின் பிறந்ததிகதி இரண்டு விதமாக உள்ளது. சில ஆவணங்களில் அவர் 1950ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி பிறந்ததாகவும் உள்ளது. சில ஆவணங்களில் அவர் 1951ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி



பிறந்ததாக இருக்கிறது. 1951 ஆம் ஆண்டு பிறந்ததாகவுள்ள ஆவணம் ஏற்றுக்கொள்ளப் பட்டால், வி.கே.சிங் இராணுவத் தலைமைத் தளபதி பொறுப்பில் மேலும் ஓராண்டு நீடிக்க முடியும். ஆனால் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, 1951ஆம் ஆண்டு ஆவணத்தை ஏற்க மறுத்து நிராகரித்துவிட்டார். இதற் கிடையே வி.கே.சிங் இது தொடர்பாகதுறை ரீதியிலான புகார் கொடுத்துள்ளதாகத் தெரிகிறது. இதையடுத்து இந்த விவகாரத்தில் பிரதமர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் தலையிட்டனர்.

இதையடுத்து நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியை தளபதி வி.கே.சிங் சந்தித்துப் பேசினார். அதிலும் சுமூகத் தீர்வு ஏற்படவில்லை. அப்போது வி.கே.சிங் பரபரப்புக் குற்றச்சாட்டுக்களை வெளியிட்டார். பாகிஸ்தான் இராணுவத் தலைமை தளபதி போல என்னை நடத்துகிறார்கள். என்னைப் பாதுகாப்பு அமைச்சகம் வில்லன் மாதிரி பார்க்கிறது என்றார். இந்தக் குற்றச்சாட்டு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பாதுகாப்பு அமைச்சகத்துக்கு எதிராக தலைமை தளபதி வி.கே.சிங் நீதிமன்றில் வழக்குத் தொடருவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

## வயதுக்கேற்ற வேடத்தில் நடிக்கிறாராம் கமல்



(சென்னை)


தனது வயதுக்கேற்ற வேடத்தில் நடித்து வருவதாக நடிகர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

கமல் 'விஸ்வரூபம்' படத்தில் நடிக்கிற். அவரே இப்படத்தை இயக்குகிறார். ரூ.120 கோடி பட்ஜெட்டில் படம் தயாராகிறது. படம் பற்றி கமல் அளித்த பேட்டியில், நான் சினிமாவுக்கு வந்து 50 வருடங்கள் ஆகிறது. இன்னும் நடிப்பில் சலிப்பு வரவில்லையா? என்று கேட்கிறார்கள்.

பணம், புகழுக்காக நடிக்க வந்து இருந்தால் 25 வருடங்களுக்கு முன்பே சினிமாவை விட்டு விலகி இருப்பேன். கமெரா முன் நிற்பதில் எனக்கு மகிழ்ச்சியும் ஆத்ம திருப்தியும் கிடைக்கிறது. எனவேதான் தொடர்ந்து சினிமாவில் இருக்கிறேன். என் வயதுக்கேற்ற கேரக்டர்களில் நடித்து வருகிறேன் எனத் தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

# அமெரிக்காவின் தாக்குதல்களில் ஈராக்கில் 1 இலட்சத்து 62 ஆயிரம் பேர் பலி



(பாக்தாத்)

ஈராக்கில் கடந்த 9 ஆண்டுகளாக அமெரிக்கா நடத்திய போரில் 1 இலட்சத்து 62 ஆயிரம் பேர் பலியாகி உள்ளதாக இங்கிலாந்தின் தனியார் நிறுவனமொன்று கணக்கெடுப்பை நடாத்தியுள்ளதாக ஈராக் அரசு தெரிவித்துள்ளது பலியானவர்களில் 80 வீதமானோர் பொதுமக்கள். அதாவது 1 இலட்சத்து 14 ஆயிரம் மக்கள் உயிரிழந்துள்ளனர். இவர்கள் தவிர பலியானவர்களில் மீதமுள்ள 20 வீதமானோர், அமெரிக்கா, ஈராக் இராணுவ வீரர்கள் மற்றும் தீவிரவாதிகள் ஆவர். இறந்த இராணுவ வீரர்களில் 4,474 பேர் அமெரிக்கர்கள். பாக்தாத் ஒரு அபாயகரமான நகரம் என வர்ணிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் போரின்போது பலியானவர்களில் பாதிப்பேர் இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

# மேலும் 2 ஏவுகணைகளை பரிசோதித்தது ஈரான்

(தெஹ்ரான்)

தரையில் இருந்து கடலில் உள்ள போர்க் கப்பலைத் தாக்கும் இரு ஏவுகணைகளை, நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.


கடந்த ஞாயிற்றுக்கிழமை தரையில் இருந்து விண்ணில் உள்ள இலக்கைத் தாக்கும் ஏவுகணை ஒன்று, ஈரானால் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

இந்தப் பரிசோதனை, பெரஷிய வளைகுடா மற்றும் இந்தியப் பெருங்கடலுக்கு இடையில் உள்ள ஹோர்முஸ் நீரிணையில் நடந்து வரும் ஈரானின் கடற்படைப் பயிற்சியின் போது நடந்தது.

தொடர்ந்து, அணுமின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருள் கம்பிகளையும், உள்நாட்டுத் தொழில்நுட்பம் மூலம் தயாரித்து விட்டதாக ஈரான் அறிவித்தது.

இந்நிலையில், தரையில் இருந்து கடலில் உள்ள போர்க் கப்பலை குறிதவறாமல் தாக்கும் மேலும் இரு ஏவுகணைகளை, ஈரான் வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.


இதுகுறித்து ஈரானிய கடற்படைத் தளபதி ம:.மூட் மவுசாவி வெளியிட்டுள்ள அறிக்கையில்,"காதர் மற்றும் நாசர் என்ற இந்த இரு ஏவுகணைகள் தமது இலக்கை மிகச் சரியாக தாக்கி அழித்துள்ளன. இவை ராடரின் கண்காணிப்பில் சிக்காது" எனத் தெரிவித்தார். பொதுவாக காதர் ஏவுகணை 200 கி.மீ., தூரம் வரை செல்லக் கூடியது.



நாசர் ஏவுகணை 35 கி.மீ., தூரம் வரை செல்லக் கூடியது.நூர் என்ற மற்றொரு ஏவுகணையும் பரிசோதிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.ஹோர்முஸ் நீரிணை வழியாகத் தான உலகின், 20 சதவீத எண்ணெய்க் கப்பல்கள் சென்று வருகின்றன. அதனால் அங்கு போர்ப் பயிற்சி நடத்துவதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்தது. இதையடுத்து, ஹோர்முஸ் நீரிணையை மூடப் போவதாக ஈரான் மிரட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் ஜனாதிபதி முஷாரப்புடன் கூட்டணி அமைக்கும் இம்ரான்கான்





(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஆட்சியைக் கவிழ்க்க இராணுவம் முயன்று வருவதாக பிரதமர் கிலானி கூறி வரும நிலையில், அந்நாட்டின் முன்னாள் இராணுவத்தளபதியும், முன்னாள் ஜனாதிபதியுமான முஷாரப்பின் பாகிஸ்தான் முஸ்லீம் கட்சியுடன் கூட்டணி அமைக்க முன்னாள் கிரிக்கெட் வீரரும் தெஹ்ரிக் ஏ இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான் கான் திட்டமிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் இப்போது பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த யூசுப் ராசா கிலானி பிரதமராக உள்ளார். இதே கட்சியைச் சேர்ந்த சர்தாரி அதிபராக உள்ளார்.

இந்த ஆட்சியைக் கவிழ்க்க இராணுவத் தளபதி ஜெனரல் அஸ்வாக் பர்வேஸ் கியானி திட்டமிட்டுள்ளதாக பிரதமரே குற்றஞ் சாட்டி வருகிறார்.

இந் நிலையில் 2009ஆம் ஆண்டு முதல் லண்டனில் தஞ்சம் புகுந்துள்ள முன்னாள் ஜனாதிபதி முஷாரப் இந்த மாதமே நாடு திரும்பவுள்ளதாகவும் தீவிர அரசியலில் ஈடுபடவுள்ளதாகவும் கூறிவருகிறார்.

இந் நிலையில் அவருடன் கூட்டணி அமைக்க இம்ரான்கானும் தயாராகி வருகிறார்.

இத் தகவலை அந்தக் கட்சியின் புதிய துணைத தலைவரான ஷா முகம்மத் குரேஷி தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க, நேட்டோ படைகள் மீது தாக்குதல் நடத்துமாறு உத்தரவு

அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளின் மீது தாக்குதல் நடத்துமாறு ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் இயங்கி வரும் தலிபான்களுக்கு தலைவர் முல்லா ஓமர் உத்தரவிட்டுள்ளார்.

பாகிஸ்தான் அரசு பாகிஸ்தானி தலிபான்களுடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில் பாகிஸ்தான் அரசு மற்றும் இராணுவத்துடன் ஒத்துழைக்கும் வகையில் தலிபான்களின் பல்வேறு பிரிவுகளை ஒருங்கிணைத்து புதிய ஒருங்கிணைந்த குழு ஒன்றை தலிபான் தலைவர் முல்லா ஓமர் உருவாக்கியுள்ளார்.

மொத்தம் ஐந்து பேர் கொண்ட இக்குழுவில் ஆப்கான் தலிபான் ஹக்கானி பயங்கரவாதக் குழு, மவுல்வி நஜீர் மற்றும் ஹபீஸ் குல் பகதூர் ஆகியோர் தலைமையிலான பயங்கரவாதக் குழுக்கள், பாகிஸ்தானி தலிபான் மற்றும் தெற்கு வசிரிஸ்தானில் இயங்கி வரும் மவுலானா வலியுர் ரஹ்மான் தலைமையிலான குழு ஆகியவை அடங்கியுள்ளன.

வடக்கு வசிரிஸ்தானில் இயங்கிவரும் பல்வேறு பயங்கரவாதக் குழுக்களை ஒடுக்கும்படி பாகிஸ்தான் அரசுக்கு அமெரிக்கா நிர்ப்பந்தம் கொடுத்து வரும் நிலையில் இந்தக் குழுக்கள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளன.




இக்குழுவுக்கு முல்லா ஓமர் அளித்துள்ள உத்தரவில், பாகிஸ்தான் இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்களை நிறுத்தி விட்டு, ஆப்கானில் உள்ள அமெரிக்க, நேட்டோ படைகளைத் தாக்க வேண் டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அமெரிக்கப் படைகளுக்காக உளவு பார்ப்பதாக சந்தேகப்படும் பாகிஸ்தான் நபர்களைக் கடத்திச் சென்று அவர்களை இரக்கமில்லாமல் கொலை செய்யும் போக்கையும் நிறுத்தும்படி பாகிஸ்தானி தலிபான்களுக்கு ஓமர் அறிவுறுத்தியுள்ளார். இதுபோன்ற படுகொலைகள், இஸ்லாத்திற்கு எதிரானவை எனக் குறிப்பிட்டுள்ள ஓமர் இவற்றை நிறுத்தா விட்டால் தன்னை தங்களின் தலைவர் என சுட்டிக்காட்ட வேண்டியதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மெய்தான் பாருங்கோ...

## உண்மையின் ஒரு பக்கம்



தட்டிக்கேட்க ஆளில்லையெண்டால் தம்பி சண்டப் பிரசண்டம்... எண்டு சொல்லுறமாதிரி இப்ப கடைசியா மீள் குடியேற்றம் செய்யப்பட்ட புதுக்குடியிருப்பு இடத்தில சில தேத்தண்ணிக் கடைக்காரர், தங்களைக் கேக்கப்பறைய ஆட்களில்லையெண்டோ என் னவோ தெரியாது மனம்போன போக்கில தங்கட வியாபார நடவடிக்கைகளை நடத்துகினம் பாருங்கோ.

"சுத்தம் சுகம் தரும் என்ற சொல்லை மறந்து விட்டால் வைத்தியர் வீட்டுக்குப்போவதும் வருவதும் வாடிக்கையாகி விடும்..." எண்டு ஒரு வாய்மொழி இருக்கிறதா என்ர அப்பு சொல்லுறவர். அதாவது பாருங்கோ ஒருவன் தன்ர வாழ்க்கையில சுத்தத்தைக் கடைப்பிடிக்காமல் நடந்து கொண்டால் அவனுக்கு அடிக்கடி வருத்தம் வந்து வைத்தியர் வீட்டுக்கு நித்தம் நித்தம் போய் வர வேண்டி வரும் எண்டு உந்த வசனம் சொல்லுது.

மீள்குடியேற்றம் எண்டு நாங்கள் ஊருக்கு வந்த போது ஊர் அழிஞ்சு போயிருந்தது மட்டுமில்லைப் பாருங்கோ குப்பை கூளமாகவும் தான் இருந்தது. இந்த குப்பை கூளத்துக்கை அட்டை, நட்டுவக்காலி, நாயுண்ணி, சருகுண்ணி, நாக்கிளிப் புழு, சக்கரைப்பாண்டி, இலையான், கொசு....எண்டு ஏகப்பட்ட குப்பைச் சமாச்சாரங்கள் குடியிருந்த இடத்தில, இப்ப சில தேத்தண்ணிக் கடையள் குப்பைக்கூடமாக முளைச்சிருக்கிறது ஒரு முன்னேற்றகரமான விசயமில்லை.

புதுக்குடியிருப்பில மட்டுப்படுத்தப்பட்ட மீள்குடியேற்றம் நடந்திருக்கிறதால அரசாங்கம் சிவில் நிர்வாகத்தை இன்னமும் சரியா அமுல் படுத்தேல்லைப் பாருங்கோ.

ஒரு சுகாதாரப்பிரிவோ அல்லாட்டி ஒரு உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவோ இன்னமும் சீரா இயங்காததால, சில தேத்தண்ணிக் கடைக்காரர் ஊரில இருக்கிற சனத்துக்கு நோய், நொடியளைத் தேடி வைக்கிறதில மும்முரமாயிருக்கிறது. மூடிமறைக்கப்படாத சங்கதி.

நான் இப்ப என்ன சொல்ல வாறன் எண்டால், கடைக்காரர் தங்கட கடையளின்ர சுத்தம் சுகாதாரத்தைப் பேணாமல், காசு பணம் பேணுவதிலதான் கண்ணாயிருக்கினம் எண்டு சொல்லவாறன்.

அதாவது என்னெண்டால், பொம்புளை ஒருத்தி பின்னல் நிறைய பேனையும், ஈரையும் சேமிச்சு வைச்சுக் கொண்டு, முன்முகத்துக்கு கஸ்தூரி மஞ்சள் பூசி அழகு படுத்தின மாதிரி உந்தத் தேத்தண்ணிக் கடைக்காரரும் முன்னுக்கு கடையை வடிவா அலங்காரப்படுத்தி வைச்சுக்கொண்டு, பின்னுக்கு சமையல் கூடத்தை நாற வைச்சுக்கொண்டிருக்கினம்.

ஒருக்கா என்ர பிள்ளை கடைரொட்டி வாங்கித் தின்ன ஆசைப்பட்டாள் பாருங்கோ. சரி வாடி பிள்ளை... எண்டு அவளையும் கூட்டிக்கொண்டு மெயின் றோட்டில கிடக்கிற ஒரு கொத்துறொட்டிக் கடைக்குப் போனன். கொத்துரொட்டி மேசையில கொத்துக்குப் போடுறதுக்கு வெங்காயம் தூளும் மாவுமா வெட்டிக்கிடந்தது. ரொட்டி போடுற பெடியனைக் காணேல்ல. வெங்காயத்துக்கு மேல நாலைஞ்சு இலையான் மொய்ச்சுக்கிடக்க, அதுக்குப் பகத்தில புளிக்க விட்ட மா உருண்டையளுக்கு மேல இனனும் பல இலையானுகள்.

பொடியனைக் காணேல்லையெண்டு பின்பக்கம் போனன் பாருங்கோ. என்ர ராசா அதை ஏனடியப்பு சொல்லுவான். தேத தண்ணி ஊத்துற இடத்தில.... நான் அதைச் சொல்ல மாட்டன். சத்தி எடுத்துப் போடுவியள். அட! கண்றாவி அதுதான் அப்பிடியெண்டு பாத்தால் அங்கால ஒரு அடுப்பில முட்டை அவிஞ்சு கொண்டிருக்க, அதுக்குப் பக்கத்தில ஒரு சொறி நாய்... சூனிக்குறாவிக் கொண்டு கிடந்தது. எனக்கு அதுக்கு மேல நிற்கேலாமல் போச்சுது. திரும்பி முன்னுக்கு வந்தன் கடைக்காரப் பொடியன் நிண்டான். கடையில இல்லாத தின்பண்டமொண்டைக் கேட்க அவன் இல்லையெண்டு சொன்னதும் பிள்ளையையும் இழுத்துக் கொண்டு வீட்டை ஓடி வந்திட்டன் பாருங்கோ.

இது உண்மையின் ஒரு பக்கம் எண்டதை சம்பந்தப்பட்ட ஆட்கள் உணருங்கோ. இப்படியான சுகாதாரச் சீர்கேட்டாலயோ என்னவோ எங்கட வீடுவாசல்களிலையும் இலையானுகள் எக்கச்சக்கம். அதை ஒழிக்கிறதுக்கு ஒருவர் முன்வருவாரில்லை. இதாலை வயிற்றோட்டம் வந்தால் ஆசுப்பத்திரியும் பக்கத்திலயில்லை. செய்யிற தின்பண்டங்களை உந்தத் தேத்தண்ணிக் கடைக்காரர் கொஞ்சம் சுத்தமா.... சுகாதாரமா செய்து குடுக்கலாம் தானே. கேட்கப் பறைய ஆட்கள் இல்லையெண்டிட்டு இப்பிடிக் கீழான மனோபாவத்தோடை நடக்காதையுங்கோ. ஏனென்டால் சுத்தம் கெட்டுதெண்டால் தேத்தண்ணி போடுற நீங்களும் வைத்தியர் வீட்டை தேடிப் போக வேண்டிவரும் எண்டதை நினைவில வைச்சிருங்கோ!

- சின்னக்குட்டி சின்னச்சாமி

# விவசாயத்துறையை மேம்படுத்த 10 நீர்ப்பாசனத் திட்டம் நிர்மாணம்

(கொழும்பு)

நாட்டின் விவசாயத்துறையை மேலும் மேம்படுத்தவென பத்து பாரிய புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இவ்வருடம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாட்டின் நீர்ப்பாசனத்துறையை மேம்படுத்தவென ஜனாதிபதி மஹிந்த நிதியமைச்சர் என்ற வகையில் 36 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார். இந்த பத்து நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் இந் நிதி செலவிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறுகையில், இத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் களுகல்ஓயா, அநுராதபுரம், திருமலை மாவட்டங்களில் யான் ஓயா, மன்னார் மாவட்டத்தில் மல்வத்து ஓயா நீர்த்தேக்கத்தின் கீழ் பகுதி, பதுளை மாவட்டத்தில் மொரான குளம், இரத்தினபுரி மாவட்டத்தில் எல்லகுளம், மாத்தறை மாவட்டத்தில் திகிலிஓயா, பொலனறுவை மாவட்டத்தில் கவு டுல்ல நீர்த்தேக்கத்தின் இடதுகரை, உமா ஓயா திட்டத்தின் கீழ் தல்பிட்டிகல, வட மத்திய மகாஎல ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே இந்த பத்து நீர்ப்பாசனத் திட்டங்களும் அமைக்கப்படவுள்ளன.

இந்த நீர்ப்பாசனத் திட்டங்களின் நிர்மாண வேலைகள் யாவும் நீர்ப்பாசன திணைக்களத்தின் உள்ளூர் பொறியியலாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்படும். இவற்றுக்காக வெளிநாட்டுக் கடனுதவிகள் பெறப்பட மாட்டாது. உள்நாட்டு நிதியைக் கொண்டே இந்த நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

நாட்டின் துரித பொருளாதார மேம்பாட்டுக்காக நாம் நேரடியாக பங்களிப்பு செய்து வருகின்றோம். அந்த அடிப்படையிலேயே இவ்வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை கண்டி மாவட்டத்தில் குருநாகல் ஓயா, அம்பாறை மாவட்டத்தில் ரம்புக்கனை ஓயா, குருநாகல் மாவட்டத்தில் தெதுறுஓயா, அநுராதபுரம் மாவட்டத்தில் எல்ல பொத்தான குளம், அம்பாந்



தோட்டை மாவட்டத்தில் எட்டிகாவகுளம், மொனறாகலை மாவட்டத்தில் கீழ் ஊவ நீர்ப்பாசனம், அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா நவோதய திட்டம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசனத்திட்டங்கள் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவும் இவ்வருடம் செயற்படத் தொடங்கும். அவைவிரைவில் மக்களிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## தேடப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்

பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடச் சென்ற போது உயிரிழந்த 30 வயது நபரின் மரணம் தொடர்பில் தேடப்பட்டுவந்த பொலிஸ் உத்தியோகத்தர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டதாக கோட்டை நீதவான் நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரின் வெளிநாட்டு பயணம்பற்றி குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் அறிக்கையை எதிர்பார்த்திருப்பதாக பொலிஸார் நீதிமன்றில் கூறினர். இதேவேளை, இந்த வழக்கு தொடர்பில் விளக்கமறியலில் இருந்த இரண்டு பொலிஸ் கொன்ஸ்டபிள்களை தொடர்நதும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் கட்டளையிட்டார்.

பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தைச்சேர்ந்த அதிகாரியொருவர், மரணிதவர் தண்ணீர் குடித்தபோது மூச்சுத் திணறி இறந்ததாக கூறியிருந்தார். ஆனால் கொழும்பு வைத்திய அதிகாரியின் அறிக்கையில் மார்பில் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதால் மூச்சுத் திணறி இறந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

பலவந்தம் பிரயோகிக்கப்பட்டதை வெளிப்படுத்தும் காயங்கள் உடலில் காணப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ரிசானா விடுதலை தொடர்பாக மீண்டும் செல்கிறது தூதுக்குழு



சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரிசானா நபீக்கை விடுவிக்கும் நோக்கில் அவரால் உயிரிழந்ததாகக் கூறப்படும குழந்தையின் உறவினர்களைச் சந்திப்பதற்கு குழு வொன்றை மீண்டும் அந்த நாட்டிற்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

தாம் உள்ளிட்ட குழுவினர் அடுத்த வாரம் சவுதி அரேபியாவிற்குச் செல்லவுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்தார்.

அண்மையில் சவுதி அரேபியாவிற்குச் சென்ற போது ரிசானா நபீக்கினால் உயிரிழந்ததாகக் கூறப்படும் குழந்தையின் பெற்றோரை சந்திப்பதற்கு இலங்கைப் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதன்போது உயிரிழந்த குழந்தையின் தந்தை ரிசானாவை விடுதலை செய்வதற்கு தனது விருப்பத்தைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இம்முறை உயிரிழந்த குழந்தையின் தாயுடன் விரிவான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

## குளிருடன் கூடிய காலநிலை மாத இறுதிவரை நீடிக்கும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் குளிருடன் கூடிய காலநிலை இந்த மாத இறுதி வரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது நிலவும் வறட்சியுடன் கூடிய காலநிலையும், குளிர் காலநிலையும் தொடர்ந்தும் நீடிக்கும் என திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.எச்.காரியவசம் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக நாட்டின் பல பகுதிகளில் 20 செல்சியஸிற்கும் குறைந்த வெப்பநிலை பதிவாகியிருந்தது. நாட்டின் சில பகுதிகளில் 14 மற்றும் 15 செல்சியஸ் வெப்பநிலை காணப்பட்டதாக வளிமண்டலவியல் திணைகளம் குறிப்பிடுகின்றது.

வடதுருவத்தில் நிலவும் ஈரப்பதன் காரணமாக அதிகளவு குளிரான காலநிலை இலங்கையில் காணப்படும்.

எனினும் வளிமண்டலத்தில் ஈரப்பதன் குறைவாகக் காணப்படுவதனால் வறட்சியான காலநிலையும் நிலவும் பகல் வேளைகளில் நாட்டிற்கு சூரிய வெப்பம்



கிடைப்பதுடன் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் சூரிய வெப்பம் அதிகளவு கிடைக்காது. இரவு வேளைகளில் காணப்படும் குளிரான காலநிலை படிப்படியாக அதிகரித்து, காலையில் அதிகளவு குளிர் நிலவும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கப்பல்கள் குறித்து ஆய்வு அனுமதி கேட்கிறது சீனா

இலங்கையைச் சூழவுள்ள இந்து சமுத்திரத்தில் 14 ஆம் நூற்றாண்டில் பாராக்கிரமபாகு மன்னன் காலத்தில் காணாமற் போனதாகக் கூறப்படும் 300 கப்பல்கள் சம்பந்தமாக ஆய்வுகளை மேற்கொள்ள சீன அரசாங்கம் இலங்கையிடம் அனுமதி கோரியுள்ளது.

இதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக சீனாவின் உயர் அதிகாரிகள், இலங்கை தொல்பொருள் ஆணையாளரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த ஆய்வுகளின் போது தொல்பொருட்கள் கிடைத்தால், இரண்டு தரப்பும் பகிர்ந்து கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்த ஆய்வுப்பணிகளுக்காக இலங்கை வரும் நிபுணர்களுக்கு, இலங்கையில் வதிவிட வசதிகளை வழங்கவேண்டும் எனவும் சீன அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இந்திய வெளியுறவு அமைச்சர் வருகை அரசாங்கம் அனுமதி அளிக்கக்கூடாது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போர்க்கொடி

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணாவின் வருகைக்கு அரசாங்கம் அனுமதியளிக்கக் கூடாது. இலங்கையில் இனவாதத்தை ஏற்படுத்தி மீண்டும் தமிழ் மக்களை அழிவிற்குள் தள்ளிவிடவே இந்தியா முயற்சிக்கின்றது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. நாட்டில் அதிகாரப் பகிர்விற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. தமிழ் மக்களின் அழிவிற்கும் பின்னடைவுகளுக்கும் இந்தியாவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமே பொறுப்புக் கூற வேண்டும் என அந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும் பொதுச் செயலாளருமான வசந்த பண்டார, இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் எஸ். எம் கிருஷ்ணா அடுத்த வாரத்தில் இலங்கை வரவுள்ளார். இவரது வருகையின் பின்னணியில் இலங்கைக்கு ஆபத்தான விடயங்களே உள்ளன.

வடக்கு ரயில் பாதை அமைப்பு,பணிகளைப் பார்வையிடுவதற்காக என கிருஷ்ணா இலங்கை வந்தாலும் இந்தியாவின் நோக்கம் அதுவல்ல. நாட்டில் இனவாதப் பேச்சுக்களை ஆரம்பித்து மீண்டும் தமிழ், சிங்கள உறவை முறிப்பதே குறிக்கோளாகும். எனவே, அரசாங்கம் இந்தியா விடயத்தில் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரப் பகிர்வில் பிடிவாதமாக உள்ளது. இதற்கு துணையாகவே இந்தியா எஸ். எம்.கிருஷ்ணாவை இலங்கைக்கு அனுப்புகின்றது. தமிழ் மக்கள் கடந்த முப்பத



தாண்டு காலமாக பெரும் அவலங்களைச சந்தித்து வந்தனர். தற்போது யுத்தம் முடிவடைந்து 2 வருடங்களை தாண்டியுள்ள நிலையில் முன்னைய கால கட்டத்திற்கு அம்மக்களை தள்ளிவிடவே கூட்டமைப்பு மற்றும் இந்தியா முயற்சிக்கின்றன.

உள்நாட்டு விவகாரங்களில் இந்தியாவின் தலையீட்டை இலங்கை ஒருபோதும் அனு மதிக்காது. அதேபோன்று அதிகாரப்பகிர்வை இலங்கையில் நடைமுறைப்படுத்தவும் முடியாது. ஏனெனில் தமிழ் மக்களுக்கு என்று தனி அதிகாரங்கள் கொடுக்கும்போது ஏனைய இனங்களுக்கு பாதிப்பாக அமைந்து விடும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

## பிரதான வீதிகளில் புகை பிடித்தல் தடுப்பதற்கு விரைவில் புதிய சட்டம்



பிரதான வீதிகளில் புகைபிடித்தலை தடுக்கும் வகையில் புதிய சட்டமொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான கொள்கைகளை உள்ளடக்கிய புகையிலை மற்றும் மதுபான கட்டுப்பாட்டு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் இந்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர அரசாங்கம் விதித்துள்ள சட்டங்களை மீறும் வகையில் புகை பிடிக்கும் நபர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான அதிகாரத்தைப் பொலிஸார், கலால் திணைக்களம் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# யாழில் விசர்நாய்க் கடி அதிகரிப்பு தீவிர சிகிச்சை மூலம் மரணங்கள் தவிர்ப்பு



யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 9680 பேர் விசர்நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றிருப்பதாக யாழ். பிராந்திய விலங்கு விசர நோய்த் தடுப்புப் பிரிவு அதிகாரி வி.கே.வருணநாதன் தெரிவித்துள்ளார். இந்நோயின் தாக்கம் காரணமாக கடந்த ஆண்டில் எவரும மரணிக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். கடந்த மூன்று ஆண்டுகளில் இவ்வாறு விலங்கு விசர் நோயினை யாழ். மாவட்டத்தில ஒழிக்க முடிந்திருபபதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை நாய்களால் கடியுண்ட 3929 பேருக்கு விலங்கு விசர்நோய் ஏற்படக்கூடும் எனக் கருதி சிகிச்சையளிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட அவர் 76827 நாய்கள யாழ். மாவட்டத்தில் இருப்பதாகவும் அவற்றில் 1984 பெண் நாய்களுக்கும் 244 ஆண் நாய்களுக்கும் கருத்தடைச் சிகிச்சை மூலமாக இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை விசர்நாய்க் கடிக்கு இலக்கான 5322 பேருக்குத் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டி ருப்பதாகவும் மேலும் 2702 பேருக்கு இவ்வாறு தடுப்பு மருந்து தொடர்ந்து போடத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து இந்நோயின் தாக்கத்தை இல்லாது ஒழிக்கச் சுகாதார அமைச்சினால் பெருமளவு நிதி செலவிடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# மீள் குடியேறியோருக்கு காணிப்பத்திரங்கள் வழங்கல்

(வவுனியா)

வவுனியாவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 425 பயனாளிகளுக்குக் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருவதாக வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

பிரதேச செயலரின் வேண்டுகோளுக்கிணங்க வடமாகாண காணி ஆணையாளரின் விசேட அனுமதியின் கீழ் காணிக் கச்சேரி மூலமாக காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டார்.

# புலிகளை வெற்றிகொண்டது எப்படி இரண்டாவது அனுபவ பகிர்வு

## விசேட கருத்தரங்கிற்கு ஏற்பாடு

(கொழும்பு)

பயங்கரவாதத்தைத் தோற்கடிததமை தொடர்பான அனுபவப் பகிர்வு - 02 என்ற தொனிப்பொருளில் விசேட கருத்தரங்கு ஒன்றை நடத்துவதற்குப் பாதுகாப்பு அமைச்சு திட்டமிட்டுவருகிறது.

தீவிரவாதத்தைத் தோற்கடி த்த ஶ்ரீலங்காவின் அனுபவங்கள் என்ற போர்க் கருத்தரங்கை இந்த ஆண்டிலும் பெரியளவில் நடத்தவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஶ்ரீலங்காவின் அனுபவங்கள் என்ற பெயரில் போர் அனுபவப் பகிர்வுக் கருத்தரங்கு ஒன்றை கடந்த ஆண்டு மே மாதம் இராணுவத்தினால் கொழும்பில் நடத்தப்பட்டது.

இராணுவத்தின் இந்தக் கருததரங்கைப் புறக்கணிக்குமாறு அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் உலக நாடுகளைக் கேட்டிருந்தன.

இந்த நிலையில் தீவிரவாதத்தைத் தோற்கடித்த ஶ்ரீலங்கா வின் அனுபவங்கள் - 2 என்ற தலைப்பில் இந்த ஆண்டும் போர்க்கருத்தரங்கை நடத்தப் போவதாக லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற புத்தாண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவவாறு கூறியுள்ளார்.

விரைவில் இந்தக் கருத்தரங்கை பெரியளவில் நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை இராணுவத்தினருக்கு சீனா, இந்தியா, பங்களாதேஷ், மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் பயிற்சி வசதிகளை அதிகரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# மாளிகாவத்தையில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு மாளிகாவத்தை ஜும்மா பள்ளிவாசல் சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டை அடுத்து அங்கு பெரும் பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்ததோடு அருகில் இருந்த ஒருவரும் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதை அடுத்து குறித்த இடத்திற்கு பொலிஸார் சென்றுள்ளனர். இதன் போது அங்கு கூடியிருந்த மக்கள் முச்சக்கர வண்டி ஒன்றுக்கு தீயிட்டு சேதப்படுத்தி எதிர்ப்பு வெளியிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஒருவகை பதற்றம் ஏற்பட்டதாகவும் அந்த சமயத்தில் பொலிஸ உத்தியோகத்தர் ஒருவர் பொது மக்களின் தாக்குதலில் காயமடைந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# காரைநகர் பிரதேசத்தில் தென்னங்கன்றுகள் விநியோகம்



(காரைநகர்)

காரைநகர்ப் பிரதேசத்தில் 'திவிநெகும' திட்டத்தில் 900 குடும்பங்களுக்கு தலா இரண்டு தென்னங்கன்றுகள் வீதம் 1800 தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் காரைநகர் பிரதேச செயலக மண்டபத்தில் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி., காரைநகர் அமைப்பாளருமாகிய ரஜனி (கண்ணன்) உரையாற்றுகையில், கடந்த நெருககடியான காலப்பகுதியில், 98 ஆம் ஆண்டு முதல் இவ்வாறான பயனதரும் மரங்களை விநியோகித்து வருகின்றோம். இன்று அந்த மரங்களில் இருந்து பயன்பெறப்படுகின்றது. அதேபோல் இப்போது வழங்கப்படுகின்ற இந்த தென்னங் கன்றுகளையும் இரண்டு வருடங்களுக்கு கவனமாகப் பேணி வளர்ததால் நீடித்த பலனை அனுபவிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

மேலும் பயனாளிகளைத் தெரிவுசெய்யும்போது விவசாயிகள் மட்டுமல்லாது எல்லாத்தரப்பினரையும் ஒருங்கிணைத்துக் கொள்ளவேண்டும் 'என்ற வேண்டுகோளையும் விடுத்தார்.

அங்கு உரையாற்றிய பிரதேச செயலர், வழங்கப்பட்ட உதவிகள் சரியாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை ஊழியர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மேலும் வெற்றிகரமாகத் திட்டங்களை நடைமுறைப் படுத்தினாலேயே மேலும் பல உதவிகளைப் பெறமுடியும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் கிராம அலுவலர்கள் பயனாளிகள் என பெருமளவானோர் பங்குபற்றினர்.

---

## வடக்கு மாகாண...

போர் முடிந்தபின் வடக்கிலே ஜனாதிபதித் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும், உள்ளூராட்சித் தேர்தலையும் இந்த அரசாங்கம் நடத்திமுடித்துள்ளது. அதேபோல் கிழக்கு மாகாணம் மீட்கப்பட்ட உடனேயே விழுந்தடித்துகொண்டு சென்று கிழக்கு மாகாணசபை தேர்தலை நடத்தியது. இந்தத் தேர்தல்களை எல்லாம் நடத்தி முடிந்த அரசாங்கத்திற்கு ஏன் வடமாகாணசபை தேர்தலை மாத்திரம் நடத்த முடியவில்லை?

ஆளும்கட்சி அல்லாத வேறு கட்சிகளின் ஆளுமையின் கீழ் வடமாகாணசபை வந்துவிடக் கூடாது என்பதற்காகவே அரசாங்கம் வடமாகாணசபை தேர்தலை தொடர்ந்து ஒத்தி வைக்கின்றது. தமது கட்சி வெற்றி பெறும் சூழல் வடமாகாணத்தில் உருவாகும் என எதிர்பார்த்து அதுவரைக்கும் அரசாங்கம் பல்வேறு சாக்குப்போக்குகளை சொல்லியபடி காலத்தை கடத்திவருகிறது. தமது கட்சியோ அல்லது வேறு கட்சியோ எது வெற்றி பெற்றாலும் கூட அது ஜனநாயகத்தின் வெற்றி என்பதை புரிந்துகொள்ளும் பண்பாடு இந்த அரசாங்கத்திற்கு கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

---

## அறவிடமுடியாத...

முப்பதாயிரம் ரூபா வீதம் வழங்கப்படுகிறது. அந்த மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் கிளிநொச்சி செல்வாநகர் கிராமமும் அடங்குகின்றது குறித்த கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு முப்பதாயிரம் ரூபா வீதம் வாழ்வாதார கடன் வழங்கப்பட்டு அவை அறவிடப்பட்டும் வந்துள்ளது. இருப்பினும் பதினேழு பயனாளிகள் ஒழுங்காக கடனை திருப்பிச் செலுத்த தவறியதன் காரணமாக கடனை செலுத்தாதோருக்கான மடிப்பிச்சை எடுத்தல் எனும் தலைப்பில் பிரதிதிட்டப்பணிப்பாளர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, கச்சேரி கிளிநொச்சி எனும் முகவரியிலிருந்து செல்வாநகர் கிராம அபிவிருத்தி அமைப்புக்கு கடந்த மாதம் 30 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் அனுப்பட்டுள்ளது.

நேற்று கிளிநொச்சி செயலக மீள்எழுச்சிதிட்ட உத்தியோகத் தர்கள் சிலர் குறித்த கிராமத் தில் கடனை ஒழுங்காக மீள செலுத்தாதவர்களின் பெயர்களை ஒரு அட்டையில் எழுதி வீதியில் காட்சிக்கு வைத்து வீதியால் செல்லும் பயணிகளிடம் செல்வாநகரில் இந்த பெயர்களை உடைய நபர்கள் கடனை மீள செலுத்தவில்லை எனவே அவர்களுக்காக அவர்களது கிராமத்திற்காக நாம் மடிப்பிச்சை எடுக்கின்றோம் எனவே தங்களால் மடிப்பிச்சை போடவும் ஒரு ரூபா என்றாலும் போட்டுச் செல்லுங்கள் என வாளி ஒன்றினை ஏந்தியப்படி பிச்சை எடுத்துள்ளனர். இதன் மூலம் இவர்கள் 3200 ரூபாவினையும் சேகரித்துள்ளனர். இதனை அந்த அதிகாரிகளே எம்மிடம் நேரடியாக தெரிவித்தனர். 256084 ரூபாவுக்கே தாங்கள் தங்களின் மேலதிகாரியின் பணிப்புக்கு அமைய இச் செயற்பாட்டில் இறங்கியதாகவும் அவர்கள் எமது செய்தியாளரிம் தெரிவித்துள்ளனர்.

பாரியதொரு யுத்த பாதிப்புக்கு முகம் கொடுத்து பின்னர் மீள்குடியேறி தங்களின் வாழ்வை மீள கட்டியெழுப்பி வரும் இவ்வேளையில் 256084 ரூபா பணத்திற்காக அதிகாரிகளின் இந்நடவடிக்கை மக்கள் மத்தியிலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (29)

---

## குழந்தையின்...

அச்சுறுத்தியுள்ளனர். பணம் தரமறுத்தால் கைக்குழந்தையை வெட்டிக்கொலை செய்வோம் என அச்சுறுத்தியுள்ளனர். கைக்குழந்தையின் உயிரை காப்பாற்றுவதற்காக குழந்தையின் தாயார் வீட்டில் உள்ள பணத்தையும் உடமைகளையும் கொடுத்துள்ளார். இதனை அடுத்து கைக்குழந்தையின் தலையில் வைக்கப்பட்டு இருந்த கூரிய ஆயுதத்தையும் எடுத்துக்கொண்டு திருடர்கள் தலை மறைவாகியுள்ளதாக பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆறு பேர் கொண்டகொள்ளை குழுவினரே இந்த கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாகவும் மூவ்ர் வீட்டுக்குள் உள் நுழைந்து இருந்தனர். மற்றைய மூவர் வீட்டுக்கு வெளியில் மோட்டர் சைக்கிளில் காத்திருந்ததாக முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## போதைவஸ்து...

காங்கேசன்துறை பொலிஸார் காவலில் விசாரணைக்கு உட்படுத்தினர். பின்னர் 5 மீனவர்களும் யாழ்ப்பாணம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் கடந்த சில வாரங்களாக தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர்.

மீனவர்களையும், படகையும் விடுவிக்கக் கோரியும், போதைப் பொருள் கடத்தியதாக பதிவு செய்த வழக்கை இரத்து செய்யுமாறு வலியுறுத்தியும் இராமேஸ்வரம் மீனவர்கள் உண்ணாவிரதம், சாலைமறியல் போராட்டங்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (137)

---

## பிரித்தானிய...

தொடர்பாக நாளை வியாழக்கிழமை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். அத்துடன் யாழ். ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகத்தையும் இக்குழுவினர் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை இன்று காலை இக்குழுவினர் கிளிநொச்சிக்கும் சென்று நிலைமைகளை அவதானிக்கவுள்ளனர். (பா)

# பிரான்ஸில் வெளியிடப்பட்ட முத்திரைகள் உத்தியோகபூர்வமானவையல்ல

(பிரான்ஸ்)

பிரான்ஸில் வெளியிடப்பட்ட புலிகளின் சின்னங்கள் மற்றும் படங்கள் ஆகியவற்றை கொண்ட முத்திரைகள் பிரான்ஸின் உத்தியோகபூர்வ முத்திரைகள் அல்ல என கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதுவராலயம் நேற்றுத் தெரிவித்தது.

பிரபாகரன் மற்றும் புலிகளின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட முத்திரை பிரான்ஸில் வெளியிடப்பட்டதாக வெளியான செய்திகள் தொடர்பாக, கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதுவராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புலிகளின் சின்னங்கள் மற்றும் படங்கள் ஆகியவற்றை கொண்ட முத்தி ரைகள் பிரான்ஸின் உத்தியோகபூர்வ தபால் திட்டத்தின் ஒரு பகுதி அல்ல. அவை பிரெஞ்சு தபால் அலுவலகங்களில் விற்கப்படுவதுமில்லை.

எனினும், பிரெஞ்சு தபால் சேவையான லா போஸ்ட்டில் சில நிபந்தனைகளின் கீழ் குறிப்பிட்ட அளவு பிரத்தியேக முத்திரைகளை வாடிக்கையாளர்கள் அச்சிட்டுக்கொள்ளும் முறை உள்ளது. இந்த வசதியை பயன்படுத்தியே தனி நபர்கள் சிலர் இவ்வாறான முத்திரைகளை அச்சிட்டுள்ளனர்.

இந்த முத்திரைகளுக்கான கட்டளை கொடுக்கப்பட்ட போது, அவை உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை என்பதை அதிகாரிகள் கவனிக்க தவறிவிட்டனர் என்பதை லா போஸ்ட் உணர்ந்துள்ளது.

2006 ஆம் ஆண்டு பயங்கரவாத இயக்கமாக ஐரோப்பிய ஒன்றியத்தினால் புலிகள் பட்டியல்படுத்தப்பட்டமை குறித்து பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ள நிலையில் இந்த முத்திரைகள் மேலும் அச்சிடப்படமாட்டாது எனவும் லா போஸ்ட் உறுதியளித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகியோரை விடுதலை செய்யக் கோரி நேற்று கோட்டை புகையிரநிலையத்திற்கு முன்னாள் மக்கள் போராட்ட இயக்கத்தினர் துண்டுப்பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டனர்.

# திருமலையில் துப்பாக்கிப் பிரயோகம் வர்த்தகர் படுகாயமடைந்தார்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை விகாரை வீதியில் நேற்று இரவு இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோக சம்பவத்தில் உல்லாச ஹோட்டலொன்றின் உரிமையாளர் ஒருவர் கடுமையான காயங்களுக்கு உள்ளான நிலையில் திருமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 8.45 மணியளவில் இடம்பெற்ற மேற்படி துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் 42 வயதான க.ராஜகோபால் என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். அவர் மேற்படி ஹோட்டலிலிருந்து விகாரை வீதி வழியாக தனது மற்றொரு நிறுவனமான எரிபொருள் நிலையமொன்றை நோக்கி வாகனத்தில் வரும்போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# தெல்லிப்பளை வைத்தியசாலை பணிப்பாளர் சபை தெரிவு

(கொழும்பு)

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையின் புதிய பணிப்பாளர் சபைத் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளை பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டுறவுப் பரிசோதகர் ச.பாலகுமார் தலைமையில் நடைபெற்ற தலைவர் - சு.கணேசமூர்த்தி, உபதலைவர் - சு.பரமநாதன், செயலாளர் - க.ஏழூர்நாயகம் பொருளாளர் - க.இராதகிரு'ணன், செயற்குழு உறுப்பினர்கள் - நா.நவரத்தினராசா, க.கணபதிப்பிள்ளை, சி.செந்தூரன், கே.உமாகரன் செ.செல்வரத்தினம், கே.விக்கினராசா, எஸ்.சுதன் ஆகியோர்இக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டுக்கான புதிய செயற்பாட்டாளர்களாக தெரிவு செய்யப்ணபட்டனர்.

# போதைப்பொருள் பாவனையாளர்களை நல்வழிப்படுத்தியவர் சுட்டுக்கொலை



வெள்ளை வானில் கடத்தி, குடும்பஸ்தர் கொலை இவரின் சடலம் சூட்டுக் காயங்களுடன் ஆன மடுவ - சிலாபம் வீதியிலுள்ள சங்கட்டிகுளம் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

புத்தளத்தைச் சேர்ந்த முஹம்மத் நிஸ்தார் என்ற குடும்பஸ்தரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாரியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள தனது வீட்டிலிருந்து நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் குறித்த நபர் முச்சக்கர வண்டிக்கு எரிபொருள் நிரப்புவதற்காக புத்தளம் நகரிற்குச் சென்றபோதே கடத்தப்பட்டதாக ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர். இவரது தலைப் பகுதியிலும் உடலிலும் சூட்டுக் காயம் காணப் படுகின்றது.

குறித்த நபர் கடந்த பல வருடங்களாக புத்தளம் நகரில் போதைப்பொருள் பாவனைக் குட்பட்ட இளைஞர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தவரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அலவி மௌலானாவிற்கு குவைத் தூதரகம் கண்டனம்

கிழக்கு மாகாணத்தில் செயற்படும் ஆயுத குழுக்களுக்கு குவைத் உதவுவதாக மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா அண்மையில் ஊடகங்களுக்கு தெரிவித்தமையை வன்மையாக கண்டிப்பதாக இலங்கைக்கான குவைத்து தூதுவர் யாகூப் யூசுப் அலாதீக் தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள குவைத் தூது வராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் செயற்படும் ஆயுத குழுக்களுக்கு குவைத் உதவுதாக வெளியான செய்தி முற்றிலும் பொய்யானதாகும்.

குவைத் அரசாங்கம் இலங்கை முஸ்லிம்களுக்கு மாத்திரம் உதவி செய்யவில்லை. இலங்கையிலுள்ள மக்கள் அனைவருக்குமே உதவி செய்கின்றோம்.

இந்த உதவிகள் மனிதாபிமான, கல்வி மற்றும் அபிவிருத்தி போன்ற துறைகளுக்கே வழங்கப்படுகின்றதே தவிர வேறு எந்த நோக்கங்களுக்காகவும் வழங்கப்பட்டவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுபி முஸ்லிம்களுக்கு எதிராக போராடுவதற்காக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் ஆயுதங்களை கொள்வவு செய்வதற்காக குவைத் உள்ளடங்களாக மத்திய கிழக்கு நாடுகள் நிதியுதவியளிப்பதாக மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா அண்மையில் தெரிவித்திருந்தமைமை குறிப்பிடத்தக்கது.

# சென்னை விமான நிலையத்தில் திருடும்போது சிக்கினார்

(சென்னை)

சென்னை விமான நிலையத்தில் பயணி ஒருவரிடம் 25 ஆயிரம் இந்திய மதிப்புள்ள டொலர்களை திருடிய இலங்கை செல்வதற்காக வந்த வியாபாரி சென்னையில் கைது. சென்னை விமான நிலையத்தில் அமெரிக்கா செவ்வதற்காக வந்த அதிகாரிகள் சோதனை நடத்தினர். பின்னர் அவர் துபாய் விமானத்தில் ஏற கைப்பையுடன் தயாராக நின்று கொண்டிருந்தார். சில நிமிடங்கள் கழித்து கைப்பையை திறந்து பார்த்தார். அதில் இருந்த 25 ஆயிரம் இந்திய மதிப்புள்ள டொலர்கள் திருடப்பட்டிருந்தது.

இதையடுத்து இதுகுறித்து சென்னை விமான நிலைய அதிகாரிகளிடம் அவர் புகார் செய்தார். இதைத்தொடர்ந்து அதிகாரிகள் மற்றும் பொலிஸார் அங்குள்ள ரகசிய வீடியோ காட்சிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது குறிப்பிட்ட பயணிக்கு அருகில் நின்று கொண்டிருந்த இன்னொரு பயணி கைப் பையை திறந்து பணம் திருடுவது தெரிய வந்தது.

அவரிடம் நடத்திய விசாரணையில் இலங்கை தலைநகர் கொழும்பைச் சேர்ந்த மிளகு வியாபாரி பெர்னாண்டோ வார்னே குலகரி என்பது தெரிய வந்தது. அவரிடம் இருந்து பணத்தை மீட்டு உரியவரிடம் ஒப்படைத்தனர். மேலும் அவரை விமான நிலைய பொலிஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# விபத்துக்களைத் தடுக்க நவீன கண்காணிப்புக் கமரா

கொழும்பு உட்பட நகரப் பகுதிகளில் வீதி விபத்துக்க ளைத் தடுப்ப தற்காக வீதி கண்காணிப்புக் கமராக்கள் நவீன மயப்படுத்தப்படவுள்ளன. நபர்கள் மற்றும் வாகன இலக்க தகடுகள் என்பனவற்றை இனம் காணும் வகையில் பாதுகாப்பு கண்காணிப்பு கமராக்கள் நவீன மயப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ மா அதிபர் என்.கே. இலங்கக் கோன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வாகன போக்குவரத்து வழக்குகள் தொடர்பாக அறிவிக்கப்படும் தணடப்பண பிரசுரங்களுக்கு பதிலாக நிதி குறுந் தகவல்கள் மூலம் அபராதம் செலுத்தும் முறைமை ஒன்றும் நடைமுறைப்படுத்த எதிரபார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த சகல அதிகாரிகளுக்கும் அரசசேவை ஆணைக்குழுவிற்கு அமைய பதவி உயரவுகள் மற்றும் இட மாற்றங்கள் வழங்கப்படும் எனவும் பொலிஸ் மா அதிபர் எம்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சியில் இலங்கை வங்கி 1400 மில்லியன் கடன் வழங்கியுள்ளது

(கொழும்பு)

இலங்கை வங்கியின் கிளிநொச்சி கிளை கடந்த 2011 ஆண்டு 7500 பயனாளிகளுக்கு 1400 மில்லியன் ரூபாவினை கடனாக வழங்கியுள்ளதாக கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார். இதில் விவசாய கடனாக சிறுபோகம் நெற்செய்கைக்கு 1200 பயனாளிகளுக்கு 167 மில்லியன் ரூபாவும் பெரும்போகம் நெற்செய்கை 2200 பயனாளிகளுக்கு 294 மில்லியன் ரூபாவும் வியாபாரத்திற்கு 1000 பயனாளிகளுக்கு 180 மில்லியன் ரூபாவும் உள்ளடங்குகின்றன.

இதனை விட சிறு கைத்தொழில் புனர்வாழ்வு அமைச்சின் கடன்திட்டம் வடக்கின் வசந்தம் கடன் இலங்கை வங்கியின் நிதியிலிருந்தான கடன் என பல்வேறு வகையான கடன்திட்டங்கள் உள்ளடங்குகின்றன. அத்தோடு 2012 ஆம் ஆண்டு குழுக்களை அமைத்து மாவட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக இக்கடன் தொகையினை இரண்டு மடங்காக அதிகரிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

நாளாந்தம் 4000 வாடிக்கையாளர் வந்து செல்கின்ற வங்கி கிளையாக காணப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர் . (29).

## மீனவர்களுக்கு கடும் பாதிப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி கடற்பரப்புக்குள் பிரவேசிக்கும் றோலர்களால் தாம் தொழில் ரீதியாக பெரும் பாதிப்பையும் நட்டத்தையும் அடைவதாக பூநகரி பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளி, சனி, திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் தங்களுடைய கடற்பகுதிக்குள் வருகின்ற இந்த றோலர்களால் குறித்த நாட்களில் தாம் அச்சத்தில் கடலுக்கு செல்வதில்லை எனவும் இவர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு றோலர்கள் வந்து செல்கின்றமையால் தங்களுடைய பெறுமதி வாய்ந்த வலைகள் அறுக்கப்படுவதாகவும் சில வேளைகளில் காணாமல் போவதாகவும் பூநகரி கடற்றொழிலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

# பணி நிலை வெற்றிடம்

**தினமுரசு பத்திரிகையில் பின்வரும் வேலைகளுக்கான பணி நிலை வெற்றிடம் உண்டு.**

1. அச்சு இயந்திரம் இயக்குபவர் (Sord, Kord) (பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
2. பக்க வடிவமைப்பாளர்
3. கணினித் தட்டச்சாளர் (தமிழ்)

மேற்படி பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 10.02.2012 இற்கு முன்னதாக சுய விபரக்கோவையை ஆளணி முகாமையாளர் தினமுரசு, 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு அல்லது thinamurasu@live.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.